T. 1661

T
1661

1661

MUTHAMIL VANAR

BY

PANDIT R. S. NAVALAR,

TAMIL PANDIT, ENGLISH HIGH SCHOOL,

THUCKALAY.

CHENTAMIL NILAYAM PUBLISHING HOUSE,

PADMANABHAPURAM.

1934

Rights reserved]

[Price 8 Annas

முத்தமிழ் வாணர்.

ஆக்கியோர்:—

பண்டித இராம சுப்பிரமணிய நாவலர்,
[தமிழ்ப் பண்டிதர், உயர்தர ஆங்கலகலாசாலை, தக்கலை.]

செந்தமிழ் நிலையம் நூற்பதிப்பகம்,
பத்மநாபபுரம்.

வி. வி. அச்சுநிலையம் கிளை, திருவனந்தபுரம்.

1934

உரிமை ஆசிரியர்க்கு]

[விலை அணு 8.

முன்னுரை.

அமிழ்தினு மினிய நம்மொழிக்கண் நிலவும் அளவின்மிக்க அருநூற்றொகுதியிற் போதரும் செய்யுட்களை ஆய்ந்து கற்றலும் அவற்றை ஆக்கிய நல்லிசைப்புலவர் தம வரலாற்றை யாய்தலும் கழிபேரின்பத்தைப் பயப்பனவாம். அவர்தம் வரலாற்றை யாய்வதொடு அருஞ்செய்யுட் பயிற்சியையுங் கைவரச்செய்யற்பால நெறியொற்றி இயற்றப்படும் சுவடிகள் மாணாக்கர்க்கு நனிபயன்செய்யும் என்பது ஒருதலை.

கடைச்சங்கச் சான்றோருள் கபிலர், பரணர், நக்கீரர் மூவரும் தலைசிறந்தவராவர் என்பது யாவரானு மொப்ப முடிந்த தொன்று. அவர் தம வரலாற்றையும் அவரால் யாக்கப்பெற்ற செய்யுட்களையும் முதற்கண் அறிந்து கோடல் பண்டைத் தண்டமிழ்ப் பனுவலாற்றிடைத் துறைபோக நினைவார்க்கு இன்றியமையாதது. அப்பெரும் புலவர் தம் ஒப்பருஞ் செய்யுட்கள் இக்காலமாணவர்க்கு எளிய வாமாறு அவற்றின தொகுபொருளை யாண்டாண்டு அமைத்துக் காட்டியும் அவர் தம் வரலாற்றை அச்செய்யுட் பகுதிகளோடு இணக்கியும் இஃது இயற்றப்பட்டுள்ளது. இயலிசைநாடக மென்னும் முத்தமிழினும் அம் மூவரும் கடைபோயவராதலின், "முத்தமிழ்வாணர்" என்பது அவர் பெயர்த்தொகைக்கும் ஆற்றலுக்கும் இயைபுடைத்தாயிருப்பதுபற்றி இச்சுவடிக்குப் பெயராயமைக்கப்பெற்றது. இதன்கட் போந்த பொருண்மைகளெல்லாம் அவர் தம் செய்யுட் பயனாதலின், இந் நூற்சிறப்பனைத்தும் அவர்க்கே உரித்தாகற்பாலது. சிறந்ததொரு இலக்கியமென மாணாக்கர் இதனைப்பல தாம் பயிலின், விழுமிய பயன் எய்துவரென்க.

பண்டித இராமசுப்பிரமணிய நாவலர்.

முத்தமிழ்வாணர்.

கபிலர்.

பாரியையு மன்றிப் பறம்பினையும் பாடித்தம்
நேரியமெய்ந் நண்பு நிலைநிறுப்பான் —பாரில்
வடக்கிருந்த வண்மைக் கபிலர் வரலா
றடக்கி யுறைவா மறிந்து.

இளமையும் புலமையும்.

திருந்திய தீந்தமிழ் பொருந்தி விளங்கும் பாண்டிநாட்டின்கண்ணே, திருவாதவூரிலே அருமறை அந்தணர் குலத்திலே நந்தாவிளக்கென இற்றைக்கு ஆயிரத்தெண்ணூறு யாண்டுகட்கு முன்னர்த்தோன்றியருளினார், கவிவன்மை சான்ற கபிலர் என்பார். அன்னார் தம் இளமைப்பருவத்திற்றானே நல்லாசிரியரை யடுத்து முத்தமிழ்த்துறையினுந் துறைபோகி ஈடுமெடுப்பு மில்லாத கல்விச்செல்வராய் இலங்கினர். அதுவேயு மன்றி எந்நிலத்தும் பயின்று ஆண்டுக் காணப்பெறும் கருப்பொருட்களைத் தம் கல்வியறிவோடு ஒப்புநோக்கியும் அவற்றை யடிப்படையாகக்கொண்டு புதுவது புனைந்தும் புலமை நிரம்பி வந்தனர். இங்ஙனமாக ஒருநாள் அவர் தம் ஆசிரியரோடு ஓர் இருப்பைப்பொதும்பர் புக, ஆசிரியர் ஆண்டு நின்றதோரிருப்பை மரத்தின்கட் செறிந்து மிளிர்ந்த புதுமலர்களையும் வீழ்ந்துக் கிடந்த பழமலர்களையும் சுட்டிக்காட்டி, அவரை நோக்கி, "இவ்விருபாற்பட்ட மலர்களுக்குந்தக்க உவமைஅமைத்துப பாடல் ஒன்று இயற்றுக" என்னக், கபிலரும் காலந்தாழ்க்காது,

"நெடிய இலைகளையுடைய இருப்பைமரத்தின் வட்டமாகிய ஒள்ளிய பூ வாடாதிருப்பின், பெருமையினையுடைய பிடியானையின் மருப்பினை ஒக்கும்; வாடின், கருந்தலைப்பாதவருடைய மனைதோறும் உணங்கும் செவ்விய தலையையுடைய இருள்மீனின் பொலிவை ஒக்கும்"

என்னும் பொருள் பயக்குமாறு,

"நெட்டிலை யிருப்பை வட்ட வொண்பூ
வாடா தாயிற் பீடுடைப் பிடியின்
கோடேய்க் கும்மே வாடிலோ பைந்தலைப்
பரதவர் மனைதொறு முணங்கும்
செந்தலை யிறவின் சீரேய்க் கும்மே"

எனப் பாடினர்.

கபிலரது கல்விவலன் இளமையிலேயே செறிவுற்றுக் கிடந்தமைக்கு இச்செய்யுளே சிறந்த சான்றாதல் அமையும். இப்பாடல் இடைச்சுரத்துத் தன் மகளைத் தேடிச்சென்ற செவிலியை நோக்கிக்கண்டோர் 'கற்பின் மகளிர்க்குத் தம் கணவரோடு வாழ்வதே வளப்பமாகும்; கணவனைப் பிரிந்துறையும் மகளிர்க்குப் பொலிவின்றாம்; ஆதலின், நீ வருந்தற்க' என்றுகூறி ஆற்றுவித்தமையை உரிப்பொருளாக உடைத்தாயிருத்தல் ஆராயத் தக்கதாம். இப்பொருள் இப் பாட்டிற்கேற்ப உவமையான் உய்த்துணரற்பாலது என் பது. இதனுள், குறிஞ்சி நிலத்துக்கருப்பொருளாகிய யானையும் நெய்தலின் கருப்பொருளாகிய இறாலும் அமைந்து விளங்குதல் தனி சிறப்பிற்றாம். இருப்பையின் நாண்மலருக்குப் பிடியின் கொம்பினையும் உதிர்மலர்க்கு இறாலையும் உவமைப்படுத்த நுட்பம் கபிலருடைய நுண்ணிய உணர்ச்சியைப் பல்கால் எண்ணுதற்கு இடனாகின்றது அன்றோ?

கபிலர் தம் கல்வியான் உலகம் புகழ் சிறப்பை அடைந் தனராகவே, அந்நாள் மதுரையில் விளங்கிய கடைச்சங்கத்து ஓர் உறுப்பினராதற் பான்மையராஞர். சங்கம் புக்கதும் அவரது கல்வி முன்னையினும் இவர்ந்து ஒளி வீசிற்று. சங் கத்துச்சான்ரோரெல்லாம் கபிலரது கல்வித்திறனைப்புகழ்ந்து உரைத்தார். அவர் யாவராலும் நன்கு மதிக்கப்பெற்று வாழ்ந்து வருவாராயினர்.

பிரகத்தனுக்குத் தமிழ் அறிவுறுத்தமை.

கபிலர் இன்னணம் புவிபரந்த புகழுடையராய் விளங்கி வருநாளில், பாண்டியமன்னன் ஒருவனுல் பிணிப்பட்ட ஆரிய நாட்டு மன்னனுகிய பிரகத்தன் என்பவன், பாண்டிநாட் டிலே தங்கி அந்தமிழ் சுவைத்தாஞ் செந்தமிழ் நலத்தைச் சிறிது ஓர்ந்து வருவாஞயினன். அவனது உள்ளம் தீந் தமிழில் நன்கு பதியாமையின், ஆரியமே சிறந்ததெனக் கொண்டு தமிழைத் தூற்றிவரத்தலைப்பட்டு விட்டனன். அவ னது பேதைமைக்கு மிக இரங்கிய நம் செந்நாப் புலவர் அவனைத் தமிழறிவுறுத்துவான் வேண்டி, ஓர் வைகல் அவன் மாட்டுசென்று தண்ணந் தமிழ்நலனை வண்ணம்படக்கூறி அவனது உள்ளத்தைக் கன்னித் தமிழணங்கின் சார்பிலே சேர்த்தனர். சேர்ப்ப, அவனும் தமிழிற் பேரார்வ முற்றுப் பொய்யா நாவிற் கபிலருழைத் தான் எய்யா உண்மைகள் பலவற்றையும் செவ்வனம் கேட்டு உணர்வு மேயினன். பின் னர்ப் புலவர்பெருமான் தாம் பாடிய குறிஞ்சிப்பாட்டி னைப் பொருள் விளங்க அவற்குக் கூறி அறிவுறுத்து மீண்

டனர். பிரகத்தனும் குறிஞ்சிப்பாட்டில் ஒளிர்ந்த சொன்னயங்களையும் பொருணயங்களையும் அவற்றி னுட்பங்களையும் ஓர்ந்து உணர்ந்து தமிழின் அருமையும் பெருமையுமாய்ந்து உவகை பூத்து ஆர்வம் கைகடப்பானாயினன். நாளடைவின் அவனும் திருந்திய புலமை மேவித்தமிழ் நாட்டின் விருந்தின் வாழ்வு கூர்ந்தனன். கபிலர் தமக்கு யாதொரு பற்றுமில்லாதிருப்பவும் ஆரியவரசனுழைச் சென்று வருந்தி அவற்குக் கற்பித்தது தமிழின் செவ்வியைத்தெரிக்கவன்றே? தாம் அந்தணராயிருந்தும், நடுநிலைமை மீதூர்ந்து தமிழின் புகழை மிகுத்த கபிலரது உள்ளத் தூய்மையும் தமிழ்ப்பற்றுடைமையும் வியக்கற்பாலவே.

பாரியொடு கொண்ட பயிற்சி.

இவ்வாறு கல்வியும் புகழும் கஞல விளங்கிய கபிலர் கடையெழுவள்ளல்களுள் ஒருவனான பாரியின் குணிப்பருங்குணங்களைக்கேட்டு உள்ளத்து உவகை துலங்கப்பெற்று, அவனைச்சாணவேண்டுமென விழைந்தார். புலவர்க்குப்புகல் எஞ்ஞான்றும் புரவலரல்லரோ? பாரியும் தன்னிடத்து யாவர் யாது கேட்பினும் காமும் கருத்தும் சலியாது வழங்கி வந்த பெருவள்ளலாக விளங்கினான். தான் ஓர்நாள் புனம் புக்கானாக, ஆண்டுக் குளிரான் வாடிக் கொழுகொம்பின்றி நின்றதோர் முல்லைக்கொடியைக் கண்ணுற்று, 'இது பற்றுக் கோடின்றி வருந்துகின்றது. இது தளிர்த்துத் தழையச் சார்பாமாறு என் தேரையளிப்பல்' என எண்ணித் தான் ஏறிச்சென்ற வையம்பெறும் வையத்தை அதற்குக் கொழு கொம்பின் பயனை யளிக்கும்வண்ணம் நிறுத்திச்சென்றான்

ஓருயிர்ப்பொருள்மாட்டும் தள்ளற்கரிய உள்ளக் கனிவுற்ற பாரியின் விள்ளரும் வள்ளன்மையைக் கபிலர் செவியுற்று, இத்தகையோனது நட்பைப் பெறுவதே பெறுதியென உள்ளினர்; ஆகலின், அப்போழ்தே அவனது நட்பை வேட்டு அவன் மாட்டுச்செல்வாராயினர். பாரியும் புகலரும் புலவர்க்கெல்லாம் நிழல் மரம்போன்றுள்ளானாதலின், அவர் வருகையுணர்ந்து நம் புலவர் பெருந்தகைக்குச் செய்யற்பால உபசாரங்களை முற்றும் செய்து, அவருடைய நாடல்சான்ற பாடல்களுக்குந் தலைவனாயினான். அவர் பாரியின் வள்ளன்மையைக் குறித்துப்பாடிய பகுதிகள் பல.

பாரிமாட்டுப் பரிசில்பெற விரும்பிய விறலியை நோக்கி, 'விறலி! நீரைப்பார்க்கினும் இனிய குணங்களையுடையனாய பாரிவேளிடத்து நீ அவனைப் பாடிச்செல்வாயாயின், செவ்விய அணிகலன்களைப்பெறுவாய்'

என்னும் பொருள் அமையக், கபிலர்,

'சேயிழை பெறுகுவை வாணுதல் விறலி!
தடவுவாய்க் கலித்த மாயிதழ்க் குவளை
வண்டுபடு புதுமலர்த் தண்சிதர் கலாவப்
பெய்யினும் பெய்யா தாயினும் அருவி
கொள்ளுழு வியன்புலத் துழைகா லாக
மால்புடை நெடுவரைக் கோடுதோ றிழிதரு
நீரினு மினிய சாயற்
பாரி வேள்பாற் பாடினை செலினே'

எனவும், பிறிது ஓர் அமயம்,

'இவை நல்லவெனவும் இவை தீயவெனவும் மக்கள் சுட்டி உரைப்ப நின்றன சூடப்பெறும் பூக்கள் அல்லவே? சூடப்பெறாமையால் ஒருவராலும் சுட்டப்படாத குவிந்த பூங்கொத்தினையும் புல்லிய இலையினையுமுடைய எருக்கினது

பூவேயாயினும், ஒருவன் தானுடையன கொடுப்பத் தெய்வங்கள் 'இவைபுல்லிய' என்று கருதி அவற்றை 'விரும்பேம்' என்று நினைக்கமாட்டா, அதுபோலப் பாரி, மடவராயினும் மெல்லியராயினும் தன் மாட்டு ஒன்றை வேண்டிச்செல்வாராயின், அவரது மடமையையும் மென்மையையும் நினையானாய்த் தனதுகடமை அதுவாகலான், அவர்க்குக் கொடைக் கடனிறுத்தலைக் கடப்பாடாக உடையவன்' என்னும் பொருள் பொதுள,

'நல்லவுந் தீயவுமல்ல குவியிணர்ப்
புல்லிலை யெருக்க மாயினும், உடையவை
கடவுள்பேணே மென்ஞுவாங்கு
மடவர் மெல்லியர் செல்லினும்
கடவன்பாரி கைவண் மையே'

எனவும் பாரியினது கொடைச்சிறப்பைப் பலவாறு புகழ்ந்து பாடினர்.

இன்னும், அவனது எண்மையில் வண்மையை உலகுக்குத் தெளியத் தெரிப்பான் உள்ளங்கொண்ட நல்லிசைப் புலமையாளர்,

'பாரி பாரி யென்று பலவேத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப்புலவர்
பாரி யொருவனு மல்லன்
மாரியு முண்டீண் டுலகுபுரப் பதுவே'

எனவும்,

'பாரியது பறம்பு அவனைப்பாடியவர்க்கு உரியது. பாரி சிலர் தன்னை இரந்து வேண்டுவாராயின், தானும் 'வாரேன்' என்று உரையான்; அப்பரிசிலருடைய எல்லைக் கண்ணே நிற்பன்'

என்னும் பொருள் தோன்ற,

'பறம்பு பாடின ரதுவே, அறம்பூண்டு
பாரியும் பரிசில ரிரப்பின்,
வாரேனென்னுன்; அவர் வரையன்னே'

எனவும் பாடிய செய்யுட்கள் மிக்க நயம் செறிந்து பாரியின் புகழுடம்புகளாய்த் திகழ்கின்றன.

'பாரியின் தண்பறம்பு நன்னுடு முந்நூறு ஊர்களையுடையது. அம்முந்நூறு ஊரையும் பரிசிலர் பெற்றனர்" யாமும் பாரியுமே (இப்பொழுது) உள்ளேம். நீர் பாடி வருவீராயின் உமக்கு ஈதற்பொருட்டுக் குன்றமும் உண்டு'

என்று பாரியொடு பொர வந்த மூவேந்தரை நோக்கிக் கபிலர் கூறியதும் பாரியது கொடைச் சிறப்பை விளக்குமென்க.

பாரி முல்லைக் கொடிக்குத் தேரளித்தமை கபிலரது உள்ளத்தின் உவகைக்கிடனுய் உறைந்து கிடந்தது என்பது அவர் பாரி மகளிரைக் குறித்து விச்சிக்கோனுழை,

'இவரே, பூத்தலை யறுஅப் புனைகொடி முல்லை
நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்
கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக்
கொடுத்த
பரந்தோங்கு சிறப்பிற் பாரி மகளிர்'

எனவும், இருங்கோவேளுழை,

"இவர்யா ரென்குவை யாயி னிவரே
ஊருடனிரவலர்க் கருளித் தேருடன்
முல்லைக் கீத்த செல்லா நல்லிசைப்

படுமணி யானைப் பறம்பிற் கோமா
னெடுமாப் பாரி மகளிர்"

எனவும் அவர் பாடினமையான் விளங்குகின்றது. அன்றியும், புலவர் நெடுந்தகை. தேர்வீசிருக்கை நெடியோன்' 'தேர்வண்பாரி' எனத் தேரொடுபடுத்து உரைப்பதும் பாரி முல்லைக்குத் தேரீந்த சிறப்பின் கண் தாழ்ந்த உள்ளத்தாற் போலும்!

பாரி குறுநிலமன்னனாயினும், மூவேந்தரும் அவனொடு பொருத காலை அவருக்குப் புறக்கொடாது போர்புரிந்த தோலாவீரன். அவனது வீரம்,

"கடந்தடு தானை மூவிருங் கூடி
உடன்றனி ராயினும் பறம்பு கொளற்கரிதே"

என மூவேந்தரையும் நோக்கிக் கபிலர் பாடியதனால் நனி விளங்கும்:

'அளிதோ தானே பாரியது பறம்பே
நளிகொண் முரசின் மூவிரு முற்றினும்
உழவ ருழாதன நான்குபய னுடைத்தே;
ஒன்றே,
சிறியிலை வெதிரி னெல்விளை யும்மே
இரண்டே,
தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க் கும்மே
மூன்றே,
கொழுங்கொடி வள்ளிக்கிழங்குவீழ்க்கும்மே
நான்கே,

அணிநிற வோரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங்குன்றந் தேன்சொரி யும்மே

வான்க ணற்றவன் மலையே, வானத்து
மீன்க ணற்றதன் சுனையே; ஆங்கு
மரந்தொறும் பிணித்த களிற்றினி ராயினும்
புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினும்
தாளிற் கொள்ளலிர் வாளிற் றாலன்
யானறி குவனது கொள்ளு மாறே
சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி
வரையொலி கூந்தனும் விறலியர் பின்வர
ஆடினிர் பாடினிர் செலினே
நாடுங் குன்று மொருங்கீ யும்மே'

இதனுள், 'தாளிற் கொள்ளலிர் வாளிற்றாலன்' என்னும் அடியாற் கபிலர் பாரியின் பறம்புகாவற் சிறப்பினையும் தறுகண்மையினையும் செவ்விபெற விளக்கினர்,

'அளிதோ தானே பேரிருங்குன்றே
வேலின் வேறல் வேந்தர்க்கோ வரிதே' .

என்பதும் பாரியின் வேற்போர் வன்மையை வலியுறுத்துதல் அறியத்தக்கது.

பாரியின் வீரத்தோடு படுத்து அவனது வள்ளன்மையையும் கபிலர் ஒருங்குரைக்குமாற்றான், அவன் அவற்றின் ஒன்றுலொன்று இளைத்தவன் அல்லன் என்பது புலப்படுமென்க: 'தாளிற்கொள்ளலிர் வாளிற்றாலன்' என்றவர்தாமே . 'ஆடினிர் பாடினிர் செலின், நாடுங்குன்று மொருங்கீயும்' எனவும், பேரிருங் குன்று வேலின் வேறல் வேந்தர்க்கோ அரிது' என்றவர்தாமே, 'கிணைமகட்கெளிதாற்

பாடினள் வரின்' எனவும், கூறிப் பாரியின் மறப்பெருந் திறலினையும் அறக்கொழுவண்மையினையும் இனிது தெரித்தார்.

'பாரி வேந்தருக்கு இன்னாதான், எம்போன்ற இரவலர்க்கு இனியோன்' என்னும் பொருள்பட, 'வேந்தருக்கு இன்னாகிய இனியோன்'

என்றதும் மேற் கூறியதற்குப் பிறிதொரு சான்றாகும்.

'நிழலி னீளிடைத் தனிமரம் போலப்
பணைகெழு வேந்தரை யிறந்தும்
இரவலர்க் கீயும் வள்ளியோ னூடே'

என்பது பாரியின் கொடைச்சிறப்பை நன்கு வற்புறுத்துகின்றது.

கபிலர் பாரியொடு உயிரொத்து நட்புப்பூண்டு வாழ்ந்துவந்தனர், 'பொய்யா நட்பிற் கபிலர்' என்னுமாறு அவரது உள்ளம் பாரியொடு கலந்து மிளிர்ந்தது. மூவேந்தரும் பாரியை வஞ்சித்துக் கொன்றபின்னர்ப் பாரியின் பறம்புநோக்கிப்

'பெட்டாங்கீயும் பெருவளம் பழுநி
நட்டனை மன்னோ முன்னே'

என இரங்கிக் கூறுமிடத்து 'நட்டனை' என்றது கபிலர் பாரிபறம்பில் நெடுங்காட்டங்கியதையும் பாரியொடு தமக்கு உளதாய நட்பினையும் தெரிக்கின்றது. பாரி நீங்கிய பின்னர் அவன் மகளிரை இருங்கோவேட்படுக்கச் சென்ற கபிலர் அவனை நோக்கி 'இவர்......................பாரிமகளிர்

'யானே தந்தை தோழன் இவரென் மகளிர்'

என்று கூறியது பாரிக்கும் தமக்கும் இடையே அரும்பி முதிர்ந்த அருநட்பின் பெற்றிமையை முற்ற விளக்குகின்ற

தன்றோ? தாம் பரிசிற்புலவராயிருந்தும் 'யானே தந்தை தோழன்' என்றும் அந்தணராயிருந்தும் பாரி மகளிரை 'இவரென் மகளிர்' என்றும் கபிலர் கூறியது கெழுதகை நட்பானன்றிப் பிறிதுயாது உரிமை பற்றியாம்?

பாரி புகழுடம்பை நிறுவிப்போந்த பின்னர் அவன் மகளிர் இருவரும் தம் அருமைத் தந்தையின் பிரிவாற்று ராயினர். ஆயினும், கபிலர் பாரியைப்போலவே மிக்க அன்புடன் தம்மைப்பாராட்டி வந்தமையின், அவரது கழிபெருந் துயரம் தம்மளவிற்றாயிற்று. ஒருநாள் அவர் இனிய மதித் தோற்றத்தைக் கண்டு, தந்தையை நினைவுகூர்ந்து,

'அற்றைத் திங்க ளவ்வெண் ணிலவின்
எந்தையு முடையேம்; எம்குன்றும் பிறர்கொளார்
இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தரெம்
குன்றுங் கொண்டார்; யாம் எந்தையுமிலமே'

என வருந்திக் கூறினர். கபிலர், அவரை வாழ்க்கைப் படுப்பான்வேண்டி விச்சிக்கோனையும், இருங்கோவேளையும் சென்று தம் கருத்தை உரைத்தார். மூவேந்தரும் அம்மகளிரை விரும்பிக்கேட்டும் கொடாது அவரொடு பாரி செரு உடற்றிய பான்மையான், அவ்வேந்தர் தம்மை வெகுள்வர் எனக்கருதியோ மற்று என் நினைந்தோ அவர் கபிலரது சொற்கு வயப்பட்டிலர். ஆகவே, தமிழ்ப்பெருவாணர், மலையமான் திருமுடிக்காரியின் மரபில் தோன்றிய ஆடுகெழுதோளர்க்குத, தாம் பார்ப்பார் பாது காவலில் வைத்துப்போந்த அம்மகளிரை யளித்துத் தம் கடப்பாடு முற்றினர்.

காரியும் கபிலரும்.

ஈண்டுக்கூறிய காரியென்பான் மலையமான் திருமுடிக்காரி. இவன் பெண்ணையாற்றங்கரைக் கண்ணதாகிய மலையமானாட்டின் அரசன். இவனது தலைநகரம் கோவலூர். கடையெழுவள்ளல்களுள் இவனும் ஒருவன். தமிழ்நாட்டு மூவரசர்க்கும் ஒவ்வொருகால் இவன் கைத்துணை நின்றமையால், முடிவேந்தரும் போற்றத்தக்க ஆற்றலுடையன் என்பதும் புலவர் பலரும் இவனைப் பாராட்டிப் பாடியிருத்தலின் கழிபெருவள்ளல் என்பதும் விளங்குகின்றன.

மாவண் பாரியொடு வாழ்ந்த கபிலர் காரியின் ஆற்றலும் புகழும் அருங்கொடையும் கேட்டறிந்து அவன்மாட்டு உற்றனர். மலையன் பெருவள்ளலாயினும் வரிசை அறியாது வழங்கல் கண்டு மேலோர் வெறுத்தற்கு இடனாகிய அச்செயலை நீக்கி, 'தத்தம் வரிசையானின்புறாஉமேல்,' என்றதற்கேற்ப மேலோர் உவகை கோடற்குரிய வரிசைக் கண்ணே அவற்படுத்தவேண்டிக் கபிலர்,

"ஒருதிசைக்கண் வாழும் வள்ளியோனொருவனை நினைந்து நான்கு திசைகளினுமுள்ள பரிசிலர் பலரும் வருவர்; அவரது வரிசை அறிதலோ அரிது; ஈதல் மிகவும் எளிதே. மாவண் தோன்றல்! அவ்வரிசையறிதலை நன்கு அறிந்தனையேல், அறிவுடையோர்கண் வரிசையறியாது ஒரு நிலையாகப் பார்த்தலை நீக்குவாயாக."

என்பார்,

"ஒருதிசை ஒருவனை உள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசின் மாக்கள்

வரிசை யறிதலோ வரிதே; பெரிதும்
ஈத லெளிதே மாவண் டோன்றல்!
அதுநற் கறிந்தனை யாயின்,
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே''

எனப்பாடி அறிவுறுத்தார்.

இங்ஙனம் அவற்குவேண்டும் அறிவுரைகளை அறிவு விளங்கக்கூறி, அவன் திருந்தியமை உணர்ந்த கபிலர் பிறிதோரபயத்து,

"நாட்காலைக் கள்ளையுண்டு நாளோலக்கத்து மகிழ்ச்சியை மகிழ்ந்தாராயின், தேர் ஈதல் யாவர்க்கும் எளிது காண்மின்; கெடாத நல்ல புகழ்விளங்கும் பலையன் அவ்வாறு கள்ளுண்டு மகிழாது ஈந்த இழையணி நெடுந்தேர்கள் முள்ளூர் மலையுச்சியினுள்ள மழைத்துளிகளினும் பலவாகும்''

என்னும் சிறந்த பொருளமையும்படி அவனது தேரீதற் சிறப்பை எடுத்து விளக்கினர்.

மேலும், "கழல்புனை திருந்தடிக்காரி! நினது 'நாடு கடலாற்கொள்ளப்படாது; அதனைக்கொள்ளப் பகைவர் மேற்கொண்டுவரார். அது பார்ப்பாருடையது. வீயாத செல்வத்தையும் வெற்றிபொருந்திய படையையுமுடைய முடிசெழுவேந்தர் மூவருள்ளும் ஒருவற்குத் துணைவலியாக வேண்டுமென்று அவர்பால்நின்றும் வந்தோர் தனித்தனி நின்னைப்புகழ்ந்து நினக்குத் தரும்பொருள் நுமது குடியை வாழ்த்திவரும் பரிசிலருடையது; ஆதலான், வடபால் தோன்றும் அருந்ததிபோலும் கற்பினையும் மெல்லிய மொழியையும் உடைய நின் மனைவியது தோள்மட்டுமே யல்லது 'நின்னுடையது' என்று கூறுதற்கு ஒரு பொருளுடையை யல்லை. எனினும், நீ எல்லாமுடையன்போலும் செருக்

கினை உடையையாயிருக்கின்றனை. இது என்னை?"
என்று வியந்து கூறுவார்,

"கடல்கொளப் படாஅ துடலுந ருக்கா
கழல்புனை திருந்தடிக் காரிநின் னாடே,
அழல்புறந் தருஉ மந்தண ரதுவே;
வீயாத் திருவின் விறல்கெழு தானை
மூவரு ளொருவன் துப்பா கியரென
ஏத்தினர் தருஉங் கூழே நுங்குடி
வாழ்த்தினர் வருஉ மிரவல ரதுவே;
வடமீன் புரையுங் கற்பின் மடமொழி
அரிவை தோளள வல்லதை
நினதென இலை; நீ பெருமிதத் தையே"

என அரிய செய்யுளொன்றுபாடி அவன் தன் அரிவையை யன்றிப் பிறவெல்லாம் பரிசிலர்க்கு வழங்கும் கழி பெருவள்ளல் என்பதை விளக்கினர். கபிலர் வாக்கால் தன் பெரு வள்ளன்மைக்கு எல்லையின்று என்னும் புகழைப்பெற்றது மலையற்கு மதிப்பரு மாண்பிற்றே யன்றோ?

அவன் வரையாது கொடுத்தற்குக் காலவரம்பு நோக்காதவன்; தீய நிமித்தங்கள்கூட அவன் கொடையை எவ்வாற்றாலும் தகைப்பனவல்ல. அப்பான்மையை அறிந்த கபிலர்,

"நல்லநாளன்றிச்சென்று புள் நிமித்தம் இடைத்தடை செய்யச் செவ்வியன்றிப் புகுந்து சொல்லப்படும் வகையன்றி வெறுப்பன கூறினும், ஒழுங்கின் ஓசைநிறைந்து ஒலிக்கு மருவியையுடைய பெருமைபொருந்திய மலையனைப்பாடினோர் வறிது மீள்வாரல்லர்"
என்பார்,

"நாளன்று போகிப் புள்ளிடை தட்பப்
பதனன்று புக்குத் திறனன்று மொழியினும்
வறிது பெயர்குவ ரல்லர் நெறிகொளப்
பாடான் றிரங்கு மருவிப்
பீடுகெழு மலையற் பாடி யோரே"

என்னும் அருஞ்செய்யுளைப் பாடிப் புகழ்ந்தார். இங்ஙனம் கபிலர் மலையனைத் தம் உள்ளம்கொண்ட மட்டும் புகழ்ந்தமை கருதி, மாறோக்கத்து நப்பசலையாரும் மலையமான திருமுடிக்காரியை நோக்கி,

'முள்ளூர்ப்பொருந!
தெறலருமரபினின் கிளையொடும் பொலிய
நிலமிசைப் பரந்த மக்கட்கெல்லாம்
புலனழுக் கற்ற அந்தணாளன்
இரந்துசென் மாக்கட் கினியிட னின்றிப்
பரந்திசை நிற்கப் பாடினன்'

எனப்பாடி புகழ்ந்தாரென்பது.

கபிலர் செல்வக்கோமா னல்லிசைபாடியது.

சேரநாட்டுத் தலைவனாகிய செல்வக்கடுங்கோவாழியாதன் ஓம்பா வீகையினும் தேம்பாப் புகழினும் தலை சிறந்து விளங்கினான். அவன் துப்புத்துறை போகிய கொற்ற வேந்தன்; ஒடுங்கா உள்ளத்தன்; நட்டோர்க்கல்லது கண்ணஞ்சலன்; கிளந்த சொல் பொய்ப்பறியலன். இசை மேந்தோன்றலாகிய கல்லுயர் நேரிப்பொருநன் செல்வக் கோமானுடைய இன்னன இயல்புகளைக்கேட்டுக் கபிலர்

அவற்கானை விழைந்தனர். அவன்புகழை அவற்கே கொடுப்ப உள்ளங்கொண்டார். கபிலர் பரிசிலைமட்டும் வேட்டுப் பாடுவாரல்லர்; புகழுடையாரது உண்மைப்புகழைப் பாடுதற் கண் அவர் ஆர்வமுடையர். ஆகலான், அவர் செல்வக்கோ மானையடுத்து "நீ எற்கு அளிப்பாயாக எனச்சொல்லி நின் மாட்டு இரப்பேனாக என்று எண்ணி வருகின்றேனுமல் லேன்; யான் உண்மையின் வரம்புகடந்து பொய்யாக யாதும் புகழ்ந்து சொல்வேனு மல்லேன். 'பரிசில் முதலியவற்றை விரும்பீராயின் எதன்பொருட்டு ஈண்டுவந்தீர்' என வினவுவையாயின், சொலவல்கேட்டி, பாரி ஈந்ததற்கு இரங் கலன்; ஈயுந்தோறும் இவற்றை ஈந்தோம், என எண்ணி மகிழான். அப்பாரியின் நல்லியல்புகள் நின்னுழையுமுள வாக உயர்ந்தோர் சொல்லும் நின்புகழை நின்மாட்டே மீண்டும் தரவந்தேன்" என்று நயம்படக்கூறினர். கபிலரது கட்டுரை கேட்ட செல்வக்கோமான் புலவர்பாடும் புகழைத் தான் எய்தினமைக்கு கழிமகிழ்வு கூர்ந்தான்.

கபிலர் செல்வக்கோமானுடைய வெற்றி, வள்ளன்மை, வீர முதலியவற்றைக் குறித்துப்பாடினர், பத்துப்பாட்டு.

'கடுந்திறற் றுப்புத்துறை போகிய கொற்ற வேந்தே! நின் பகைவர் நின்னைப்பணிந்து திறை தருபவேல், அவரது அகன்ற இடத்தையுடைய நாடு புலவர்பாடும் புகழ் அமை யப் பெறுவனவாம்' எனவும்,

"பார்ப்பார்க் கல்லது பணிபறியலையே
பணியா வுள்ளமோ டணிவரக் கெழீஇ
நட்டோர்க் கல்லது கண்ணஞ் சலையே
வணங்குசிலை பொருதநின் மணங்கமழ் அகலம்
மகளிர்க் கல்லது மலர்ப்பறியலையே,

நிலந்திறம் பெயருங் காலையாயினும்
கிளந்த சொல்நீ பொய்ப்பறி யலையே"

எனவும்,

"ஒருமுற்றிருவ ரோட்டிய வொள்வாட்
செருமிகு தானை வெல்போ ரோயே"

எனவும், பலவாறு செல்வக்கடுங்கோன் மல்லற் குணங்களைக் கபிலர் புகழ்ந்துள்ளார். மேலும் அவனது வள்ளன்மையை மாணுறுத்துவார், அவனை நோக்கி,

'வெற்றிபொருந்திய முரசினையும் தன்றொழிலில் தப்பாத வாளாற் பெறப்படும் வெற்றியினையும் பொன்னாற் செய்த அணிகலன்களையும் உடைய வேந்தர் உலகத்துப்பலருளர். அவராற்பெறும் பயன்யாதுதான்? வைகலும் அறம் கூறி அதனாலேயே விளக்கமடைந்த நாவினையும் சிறந்த கேள்வியினையும் உடைய விளங்கிய புகழமைந்த வேள்விகளை முடித்த அந்தணர்தம் அரிய கலத்தின் கண்ணே ஏற்க, அதிற்றானை வார்க்கும் நீர்படுதலால், மிக்க சேறு பரந்த மணல்மலி முற்றத்து, அச்சேற்றினால் யானைகள் தாம்நிற்கும் நிலையை வெறுத்தற்கு இடமான வரிசையாகிய அரிய கட்டடங்களின் இறைப்புறத்து நீவிர் வயிரியரைக்காணின் கூரிய படையால் வெட்டிச் செவ்விசெய்யப்பெற்ற சொய்த சுவலையுடைய குதிரைகளையும் விளங்கும் தேர்பூணும் எருதுகளையும் அணியணிந்துவிரைய அளிப்பீராக' என்றுகொடைபுரிதற்குரியார்க்குப் பணித்து அவ்விடத்து அவ்வறத்தின்கண்ணே என்றும் நீங்காத கோட்பாட்டையுடையையாதலால், அகற்சியால் முகில்களும் நீர்முகத்தற்பொருட்டுத் தங்குகின்ற மலையையுடைய கழிகளிடத்து மலர்ந்த நெய்தற் பூவின் இதழினது வனப்புப்பொருந்திய தோற்றப்பொலிவோடு கீ ஈகையான் மிகக்

மழையினும் பெரும் பயனைப்பொழிகின்றாய். அதனால் கழல் தொடி அண்ணல்! இசைமேம்பட்டதோன்றல்! பசியுடைய சுற்றம் அப்பசியை நீங்குதற்கு இடமான நின் பாசறையிடத்து கரியபெரிய ஆகாயத்தினிடத்தே பல மீன்களும் ஒளிகெடும்படி ஞாயிறு தோன்றினாற்போலப் பகைவரது மிக்க வலிமைகெடுத்த நின்னுடைய வலியதாளை வாழ்த்தி நின்னைக் காண்பேனாக வந்தேன்”

என்று கூறிப் புகழ்ந்தார். இங்ஙனம் ஒவ்வொன்றும் 'பத்துப்பாட்டு' என்னும் படிபத்துப் பாட்டுகளையும் பாடியருளிய கபிலருக்குச் செல்வக்கடுங்கோன் சிறுபுறம் என நூறாயிரம் பொற்காசு அளித்து, 'நன்றா' என்னும் குன்றின்மேல் ஏறிநின்று தன் கண்ணிற்கண்ட நாடெல்லாம் காட்டி அவற்றைப் பரிசிலாகக்கொடுத்தான். இத்தகைய வள்ளன்மை யார்க்கும் வாய்க்குவது ஒன்றோ? அவனது வெண்மை இல்லாத வண்மை கண்டன்றோ நம் நற்றமிழ் சான்ற வெற்றிக்கவிஞரும், அவனை, 'ஒடுங்கா உள்ளத் தோம்பா வீகைக் கடந்தடுத்தானைச் சேரலாதன்' எனப்புகழ்ந்துபாடினார்.

ஒருநாள் செல்வக்கோன், கபிலர் கைப்பற்றிப், 'புலவிர்! நும்கை மெல்லியவாம்; இதற்கென்னை காரணம்' என அவர் வாய்ப்பாடல் கேட்பான் நச்சிஉசாவுவானாயினன். கபிலரும், மறுமொழியாகக் கூறுவார்,—

“வேந்தே! கொலையானையால் கணையமரத்தை முறித்து அங்குசத்தால் முன்னர் அதனைச்செலுத்தி அது செய்யும் வினையைப் பின்னர் வேண்டுமெல்லிலே பிடிப்பவும் நிலத்துச்சூழ்ந்த கிடங்கின்கண்ணே நீர்முழுவத்தினது ஆழமாகிய உயர்ச்சியைக் கருதி ஆதன்கட் செல்லாதவாறு மிக்க செல

வினையுடைய குதிரையைக்குசைபரித்து வேண்டுமளவிலே பிடிப்பவும் ஆவம்பொருந்திய முதுகினையுடையையாய் தேர் மேல்நின்று வின்னாணால் உண்டாகிய வடுப் பொருந்தும்படி அம்பைச்செலுத்தவும் பரிசிலர்க்கு அருங்கலங்களை நல்க வும் நின் முழங்காலைப்பொருந்திய வலியாகைகள் வலியனவா கும்; புலானாற்றத்தையுடைய இறைச்சியைப் பூநாற்றத்த புகையைக்கொளுத்தி அமைத்த ஊனையும் துவையையும் கறியையும் சோற்றையும் உண்டு வருந்துஞ் செயலை அல்லது நின்னைப்பாடுவாராகிய எம்மனோருடைய கைகள் வேறு செயலறியாவாதலால், அவைதாம் மிக மெல்லிய வாயின"

எனத் தம்கைகள் மெல்லியவாதற்காரணத்தை அவ னுடையகைகள் வலியவாதற்காரணத்தொடு படுத்து மிகச் செல்விபட உரைத்தார்.

கபிலர் செல்வக்கோனை மிக்க மதிப்புடன் உளம்பேணி அவனுடைய வலிமையையும் புகழையும் ஈகையையும் பல் காலும் வாயாரப்பாடிக் களிகூர்ந்தாரென்க. மேலும், அவ னுடைய நற்குணங்களைக்கருதி அவன் நெடுங்காலம் வாழ் வது கருத்தாக்,

"காறிரை யெடுத்த முழங்குரல் வேலி
நனந்தலை யுலகஞ் செய்தன் நறுண்டெனின்
னடையடுப் பறியா வருவியாம்ப
லாயிர வெள்ள வூழி
வாழியாத வாழியபலவே."

எனவும்,

"தொலையா தாக நீவாழு நாளே"

எனவும் தீந்தமிழமுதக் தேக்கப்பாடினர்.

கண்ணகிபொருட்டுக் கடுமான்பேகனைப் பாடியது.

பேகன் தன் மனைவி கண்ணகியைப் பிரிந்துறைந்த வர லாற்றைப் 'பரணர்' என்னும் கதைப்பகுதியிற் காண்க. கபிலர் பேகன் தன் மனைவியைப் பிரிந்துறைதலையும் அவள் அக ஞன் வருந்துதலையுமுணர்ந்து வருந்தலுற்று, அவன்பாற் சென்று,

"கைவள்ளீகைக் கடுமான்பேக! நெருநல் சுரத்தின் கண் நடந்து வருந்திய எனது சுற்றம் பசித்ததாக, குணில் பாயப்பெற்ற முரசுபோல ஒலிக்கும் அருவிகளை உடைய நளி யிருஞ்சிலம்பின்கண் சிறிய ஊரின் வாயிலிற்றேன்றி வாழ்த்தி நின்று, யான் நின்னையும் நின் மலையையும் பாடினேன். அப்பொழுது, துன்பமுண்டாக உகுக்கப்பெற்ற கண்ணீ ரைத் தகைக்கமாட்டாதாவளாய், அந்நீர் தன் முலையிடத்தை நனைக்கும்படி விம்மிக்குழல் இரங்குவதுபோல மிகவும் அழுதாளொருத்தி. அவள் அருளத்தக்காள்; அவள்தான் யார்கொல்?"

என்று கூறி அவனை அவள்மாட்டு அருளும்படி வேண் டினர்.

நற்றமிழ்வாணன் நட்புக் கடனாற்றியது.

கைவண் பாரியொடு மெய்வல்கேண்மையிற் கலந்த கயக் கில் கல்விக் கபிலர் பிறப்புத்தொறும் பாரியொடு உடனு

றைவான் ஆர்வம் கொண்டனர். உண்மைநட்பாளர் யாண்டும் உடங்கு உறைவரல்லரோ? 'நெஞ்சத்தகநக நட்பதன்றே நட்பு' எனப்படுவது?

தம்முட்கெழுமலுற்ற இருவர்க்கு உணர்ச்சி ஒத்த பின்னர்நட்பினை யாகே தகைக்கவல்லது? உணர்ச்சிதான் நட்பாங்கிழமைதரும்; புணர்ச்சிபழகுதல்வேண்டா. புணர்ச்சியும் பழகுதலுமுண்டாயினபின் நட்பின் பெற்றிமை யாதாம்?

பாரி உயிர்நீத்த பின்னர்க் கபிலர் பிரிவாற்றாமை யான், அவனை முன்னிலைப்படுத்து "பலைகெழுநாடனே! மாவண் பாரி! நீ என்னை பாதுகாத்தகாலத்திலும் நீயும் யானும் கலந்தநட்பிற்குப்பொருந்த ஒழுகாதவனாய் நீ என்னை வெறுத்தவனாதல்வேண்டும். யான் நினக்குப் பொருத்தமில்லாதேனாதலால், பெருந்தக்க சிறப்பினையுடைய நட்பிற்குப் பொருந்தாது, யானும் நின்னோடு ஒருங்கு வருதற்கு என்னை விடாது நீ இவ்விடத்துத்தவிர்க என்று என்னை நோக்கிக்கூறி இவ்வாறு வேறு பட்டதொரு தன்மையை உடையவனாயினை; இவ்வாறு யான் நினக்குப்பொருததமில்லாதேனாயினும், இப்பிறப்பில் நீயும் யானும் ஒருங்குற்று இன்புற்றிருந்தாற்போலக் காட்டி மறுபிறப்பினும் இடைவிடாத காட்சியினையுடை நின்னோடு கூடிவாழ்தலை உயர்ந்த விதி கூட்டுவதாக"
என்னும் பொருள் அமைய.

'கலையுணக் கிழிந்த முழவுமருள் பெரும்பழம்
சிலைகெழு குறவர்க் கல்குமிசைவாகும்
மலைகெழு நாட மாவண்பாரி
கலந்த கேண்மைக் கொவ்வாய் நீயெற்
புலந்தனை யாகுவை புரந்த யாண்டே;

பெருந்தகு சிறப்பி னட்பிற் கொல்லா
தொருங்கு வரல்விடா அு தொழிகெனக் கூறி
யனைய்ய யாதலினினக்கு மற்றியான்.
மேயினே னன்மையானேயாயினும்
இம்மை போலக்காட்டியும்மை
இடையில் காட்சி நின்னோ
டுடனுறை வாக்குக வுயர்ந்தபாலே''

எனப்பாடி வருந்தித் தாம் எண்ணியவாறே பாரியொடு உடனுறைவு கருதி வடக்கிருந்தன ரென்றால், அவர் அவனோடுகொண்ட கெழுதகைமைக்கு யாம் எங்கே எல்லைகாண்பது?

கபிலர் கல்விப்பெருமை.

குறிஞ்சித்திணை பாடுதலில் கபிலர் மிகச்சிறந்தவர். குறிஞ்சிக்கண்காணும் கருப்பொருளுணர்ச்சி இவர் மாட்டுப்பெரிதும் பொலிந்து பொதுளியது என்பதற்கு, இவர் பாடிய குறிஞ்சிப்பாட்டு, குறிஞ்சிக்கலி முதலியன சான்றுளாகும். 'கபிலரதுபாட்டு' என ஆறும் வேற்றுமைச்செய்யுட் கிழமைக்குத் தொல்லைஉரையாசிரியர் இவரது பாட்டைச்சுட்டிக் கூறுதலானும் இவர் பாடல்வன்மை நன்கு தெளியப்படும் என்க. 'கபிலர் பரணர் நக்கீரர்' முதனாற் பத்தொன்பது பல்புலவோர்' என்வரும் முத்தமிழ் வாணருள்ளும் முதல்வைத்தெண்ணப்படும் சிறப்பு இவர்க்கே உரித்து ஆயிற்று. திருவள்ளுவமாலையிலும் இவரது பாடற்குப்பின்னரே பரணர் நக்கீரருடைய பாடல்கள் வைக்

கப்பெற்றுள்ளன. 'பலர்புகழ் நல்லிசை வாய்மொழிக் கபிலன்' எனவும் 'பரணர் கபிலரும் வாழி' எனவும் நக்கீரர் இவரைப் புகழ்ந்து வாழ்த்தினர்; 'அரசவை பணிய அறம்புரிந்துவயங்கிய—மறம்புரிகொள்கை வயங்குசெந்நாவின்—உவலை கூராக் கவலையினெஞ்சி னனவிற்பாடிய நல்லிசைகபிலன்' எனப்பெருங்குன்றூர்கிழார் இவரை உயர்த்து உரைத்தார்; 'தாழாது செறுத்த செய்யுட் செய்செந்நாவின்—வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க்கபிலன்' எனப் பொருந்தி விளங்கீரனாரும், 'பொய்யா நாவிற் கபிலன்,' என மாறோக்கத்து நப்பசலையாரும் இவரை மிகுத்து உரைத்தார். இவையெல்லாம் கபிலர்க்குப்புகழ்மாலையல்லவோ வயங்குகின்றன? பிறர் புகழைப் பாடுமுகத்தானே தம் புகழையும் நிறீஇயினார் நம் செந்தண்புலமை அந்தணாளர்.

கபிலர் பாடியவை.

குறிஞ்சிக்கலியும், குறிஞ்சிப்பாட்டும், குறிஞ்சிக்குறுநூறும், நற்றிணை குறுந்தொகை அகம்புறமிவற்றுட் சில பாடல்களும், பதிற்றுப்பத்தில் ஏழாம்பத்தும் இன்னுநாற்பதும் இவராற் பாடப்பெற்றவை. கபிலம் எனப் பெயரியதொரு நூலும் இவராற் பாடப்பெற்றதாக என்னுதற்கு இடனுண்டு. மூத்தநாயனார் திருவிரட்டைமணிமாலை, சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவந்தாதி என்னும் பிரபந்தங்களும் இவர் பாடியனவாகக் கொள்வாரும் பலர் உளர்.

கபிலர் திருவள்ளுவமாலையிற்பாடிய வெண்பா.

தினையளவு போதாச்சிறுபுன்னீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தால்—மனையளகு
வள்ளைக் குறங்கும் வளநாட வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பா விரி.

இது, திருக்குறட்பாடல்கள் குறளாயினும் பொருள் விரிந்து நிற்கின்றன என்னும் பொருள்பட 'வெள்ளைக் குறட்பாவிரி' என்றுகூறி, அப்பாடல்கள் சுருங்கநின்று பொருள் விளக்குதலை உவமைமுகத்தாற் புலப்படுத்து நிற்கின்றது.

பரணர்.

படைமடத்துப்பற்றுத பேகனைப்பா ணற்றுப்
படையிற் புகழ்ந்த பரணர்—நடைசிறிதிங்
கோதி யுணர்வாரை யோகையடைவிப்பாங்
கோதி லவர்பாடல் கொண்டு.

கல்வியும் சிறப்பும்.

பரணர் என்பார் கல்விசான்ற கடைத்தமிழ்ச்சங்கத்துப் புலவருள் ஒருவர். கசடறு கல்விக் கபிலர்க்கு இவர் பெருந் துணைவர். 'கபிலபரணர்' என்னும் பெருவழக்கினுல், பரணரும் கபிலரோடு ஒத்த புலமைஉடையவர் என்பது விளங்கும். 'பரணர் கபிலரும்வாழி' என நக்கீரரும், இன்றும் பரணன் பாடினன். என ஔவையாரும் இவரைச் சிறப்பித்து உரைத்துள்ளமை இவரது கல்விப்பெருமையைத் தெளிக்கும். அகப்பொருட்கூறுகளை நயம்பட உரைப்பதிலும், நுண்ணிய அரிய உவமைகளை எடுத்துக்காட்டுவதிலும் இவர் துறைபோயவர். இவரால் பாடப்பெற்ற மகட்பாற்காஞ்சி என்னுந் துறைமிக்க நயம்பெற்று மிளிர்கின்றது. இவருடைய பாடல்கள் பலவற்றினும் அரசர், வேளிர்களுடைய் பெயர்களும் வரலாறுகளும் விரவிவருகின்றன. இவர் இயல்பாகவே கைமிக்க இரக்கமுடையவர் என்பது இவரது பாடற்போக்கினுல் அறியப்படுகின்றது. தாம் பாடப்புக்காரது உண்மைப்புகழை விறல்பட வகுத்துக்கூறும் கழிபேராற்றல் இவரிடத்து உண்டு. இவர் பல

விடத்தும், தம் பாடற்குரிய தலைவரது கொடையொடு படுத்து அவர் வீரத்தையும் உடங்குபுகழும் தன்மையர். இவருடைய பாடல்களால் போர்ச்சார்பு உடைய தொல்பதிகள் பலவற்றின் நிலைமை புலப்படுகின்றது.

கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவனைப் பாடியது.

கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் சேரமரபிற் றிறல் பெற்று ஓங்கிய ஓரரசன். குட்டநாட்டை ஆண்டமையால் '**குட்டுவன்**' எனப்பட்டான் என்பர். இவன் **வேல்கெழுகுட்டுவன்** எனவும் கூறப்படுவன். இவன் தந்தை **நெடுஞ்சேரலாதன்**.

கல்வியிலும் ஆண்மையிலும் வென்றியிலும் வள்ளன்மையிலும் சான்ற குட்டுவனது பெருந்தகைமையினை நினைந்து பரணர் அவன் 'புலவர்பாடும் புகழுடையான்' எனக் கொண்டு அவனுடைய சிறப்புக்களையெல்லாம் தொகுத்துக் கூற எண்ணினர். உலகிற்புகழுடையார் மாட்டன்றோ புலவர்வாய்ச்சொல் செல்லும்? அவரும், துறக்கம் புக்கு இன்புறும் புகழுடையாரையன்றிப்பாடார் ஆகலானன்றோ,

> 'புலவர்பாடும் புகழுடையோர் விசும்பின்
> வலவனேவா வானவூர்தி
> எய்துப வென்ப தம் செய்வினை முடித்து'

என்றனர் ஆன்றோர். பரணரும், செங்குட்டுவற்குப் புகழ் மாலை சூட்டுவான் அவன் மாட்டுச்சென்றார். குட்டுவனும்

பல்லான்ற கேள்விப்பயனுணர்ந்த பாணர்க்குத் தகுநெறியில் வழிபாடாற்றினன். பாணர் அவன்மீது ஏர்க்கள உருவகம் பாடிச்சிறப்பித்தார். அப்பாட்டால், "[பூணைக் கோட்டிலே செறித்த மிக்கஎழிலையுடைய மருப்பினையும் வலிய கையினையுமுடைய] யானை மேகமாகவும், [வஞ்சினம் கூறுதலை இயற்கையாகவுடைய வீரர் எறிவாளாயுயர்த்த] வாட்படை மின்னலாகவும், [விளங்கிய குறுந்தடியான் அடிக்கப்படுதலைப்பொருந்திய குருதிப்பலியையுடைய] முரசக் முழக்கமாகவும், பகையரசராகிய அரவங்கள் நடுங்குதற்கும் காரணமாகிய வருத்தமுறுகின்றபொழுதிலே, [மிக்க விரை வினையுடைய] குதிரை [வீசுகின்ற] காற்றாகவும் [கட்டுதலையுடைய வலிய விற்படையின் மிக்க நாணிலே செலுத்தப் பெற்ற] அம்புகளாகிய மழைத்துளிகள் பொழிந்த [இடமகன்ற இருப்பினையுடைய ஈரத்தையுடைய] போர்க்களமாகிய வயலின்கண் தேர்கள் கலப்பைகளாகவும் [விடியற்காலையிலே புகுந்து நெடியவாக நீட்டி] நினது போர்வாளால் கீழ் மேலாக மறிக்கப்பெற்ற திருத்தமுழுகின்ற பசிய (படைச்) சாலில் [கைபிற்பிடித்து எறியப்படுகின்ற வெள்ளிய] வேலையும்கணையமரங்களையும் விதைத்து (பகைவருடைய) பெரிய தலைகளை வெட்டிச்சாய்த்த அச்சம் வருகின்ற பசிய பயிரையுடைய [பேய்மகள் பற்றிநிற்கும் பிணங்கள் விளங்குகின்றபல] போர்களையும் கூட்டமாகிய நரிகளும் கழுதுகளும் களம் படுப்பவும் பூதம் காப்பவும், பொலிகளம் தழுவிப், பாடிவருவார்க்குப் பரிசிலீதற்பொருட்டு இருந்த பெருமையாளனே"

என அவனது போர்த்திறலைப்புகழ்ந்துரைத்து,

"பொன்னுடை நெடுங்கோட்டிமயத்தன்ன
ஓடைநுதல ஒல்குத லறியாத்

துடியடிக் குழவிய பிடியிடைமிடைந்த
வேழ முகவை நல்குமதி”

எனப் பரிசிலையும் வேட்டார்.

இங்ஙனம் குட்டுவனைப் புகழ்ந்ததன்றி அவன்மீதுஒத்த சிறப்பிற் பத்துப்பாட்டும் பாடினார்.

அவற்றுள், 'நின்படுதிரைப் பணிக்கடலுழந்த தாள்' எனவும், 'இனியாருளரோ முன்னுமில்லை... வயங்குமணி யிமைப்பின் வேலிடுபு—முழங்குதிரைப் பனிக்கடல் மறுத்திசினோரே' எனவும், 'கோடுநரல்பௌவம் கலங்க வேலிட்டுடைதிரைப் பரப்பிற் படுகடலோட்டிய வெல்புகழக்குட்டுவன் எனவும், நீர்புக்குக் கடலொடுழந்த பனித்துறைப் பரதவ' எனவும் குட்டுவன் திரைகடலோட்டிய வரலாற்றை உரைத்து அவன் செயற்கருஞ்செயலை வற்புறுத்தார்.

குட்டுவன் கண்ணகிஉருவம்சமைக்கக் கல் எடுக்குமாறு இமயம்சென்ற காலைத் தன்னோடு மிடைப்பொருத ஆரியவரசரைப் புறங்கண்டவன். அது,

'வடதிசையெல்லை யிமயமாக
தென்னங்குமரியொ டாயிடை யரசர்
முரசுடைப்பெருஞ்சமந் ததைய வார்ப்பெழச்
சொல்பல நாட்டைத்தொலகவி னழித்த
போரடு தானைப் பொலந்தார்க்குட்டுவன்'

என்பதனால் விளக்கப்பட்டது.

இதனுள், குட்டுவன் குமரிமுதல் இமயம் வரையுள்ள அரசரெல்லாரையும் வென்று புகழ் சூடினமை கூறப்பட்டது காண்க.

குட்டுவன் அறுகையென்பானொடு கேண்மை பூண்டமையும் மோகூர் மன்னனை வென்று அவன் முரசம் கைக்கொண்டமையும் அவனுடைமையாகவுள்ள வேம்பை முதலோடு தடிந்தமையும் பரணர் எடுத்து உரைத்துப்புகழ்ந்தார்.

தன்னொடெதிர்த்துப் போர்செய்த அரசருடைய எழுமுடிகளையும் குட்டுவன் பறித்து வென்றி கூர்ந்தான் என்னும் வரலாறு,

> விழுமியோர் துவன்றிய வன்கணுட்பின்
> எழுமுடிமார்பின் எய்திய சேரல்

எனப்பரணரால் இனிது கூறப்பட்டது.

குட்டுவன் சிறந்த கல்வியை உடையன் என்பதும் பரணர் கூற்றால் அறியப்படுகின்றது. 'தொலையாக்கற்ப' என்று பரணர் குட்டுவனைக்கூறுதல் காண்க.

குட்டுவற் பாடிய பத்துப்பாட்டில், பரணர், அந்தச் சிறப்புக்கூறுமிடம் மிக நயமுடைத்து.

> "மறப்புலிக் குழூஉக்குரல் செத்து வயக்களிறு
> வரைசேர் பெழுந்த சுடர்வீ வேங்கை
> பூவுடைப் பெருஞ்சினை வாங்கிப் பிளந்துதன்
> மாயிருஞ் சென்னி யணிபெற மிலைச்சிச்
> சேஎருற்ற செல்படை மறவர்
> தண்டுடை வலத்தர் போரெதிர்ந் தாங்கு

வழையமல் வியன்காடு சிலம்பப்பிளிறு
மழைபெயன் மாறியகழைதிரங் கத்தம்"

என்னும் பகுதி காண்க.

பல்லாற்றானும் தன்னைப்புகழ்ந்து பாடிய பரிசில் வாணர்க்கு க்குட்டுவன் எப்பரிசிலையளிப்பான்? அப்புலவர்க்கு யாது அளிப்பின் தகும்? தன்னைத்தானே பரிசிலாக அளிப்பான்போலத் தன்மகன் குட்டுவன் சேரலை அவர்க்குப் பரிசிலாக அளித்தான் மகன் தந்தையை ஒப்பானல்லனே? அவனை யளித்ததனோடு நில்லாது, உம்பற்காட்டு வருவாயையும் பரணருக்குப் பரிசிலாக அளித்தான். பரணரும் தம் புகழ்ஒளி யாண்டும் இவர்ந்து குலாவ விளங்கினர்.

தொகைநிலை பாடியது.

போர்செய்தார் இருபக்கத்தாரும் உடங்குமாய்தல் தொகைநிலை எனப்படும். இது புறத்தைச்சார்ந்த தும்பைத்திணைத்துறை.

சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும் சோழன் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளியும் தம்முட் செருக்கிப்போர்செய்த பொழுது, இருவரும் ஒருவரை ஒருவர் முரணெறித்தாராகலின், அப்போரில் உடங்கு மடிந்தனர். அப்பொழுது அவரையும் அவர் நாட்டையும் குறித்து, பரணர்,

"மிகப்பலவாகிய யானைகளும் அம்பாற்கலக்குற்று இனிமேற் செய்யப்படும் போரின்றாகப் படைக்களத்துப்பட்டன;

குதிரைகளெல்லாம் மேலாட்களுடனே அக்களத்துப்பட்டன; தேர் கொண்டுவரலந்த சான்றோரெல்லாம் பரிசைகள் தம் கண் மறைக்கும்படி ஒருசேரப்பட்டனர்; முரசங்களெல்லாம் தம்மைப்பொறுப்பாரின்மையால், தம் தொழில் கெட்டுக்கிடந்தன; சாந்துபொருந்திய மார்பிலே நெடுவேல் பாய வேந்தரும் தம்முட் பொருதுகளத்து ஒழிந்தனர்; கழனி ஆம்பல்வள்ளித் தொடிக்கை மகளிர் பசிய ஆவலை உண்டு தண்ணிய புனலிற்பாயும் யாணர் அறாத ஊர்களையுடைய அவரது அகலிய இடத்தையுடைய நாடு என்ன வருத்தமுறுவதோ?"

என இரங்கிப்பாடினர். இதனால், பரணரது இயல்பாகிய இரக்கம் புலப்படுகின்றது. புகழை நச்சும் வேந்தர் மடிதலை மாண்பொருட்புலவர் பொறுப்பர் கொல்லோ?

வையாவிக் கோப்பெரும் பேகனைப் பாடியது.

பேகன் என்பான் கடையெழுவள்ளல்களில் ஒருவன் இவனது ஊர் நல்லூர். இவன் குளிரால் நடுங்கிநின்ற மயிலுக்குப்போர்வையளித்துக் காப்பாற்றிய வள்ளல்.

'முல்லைக்குத்தேரும் மயிலுக்குப் போர்வையும்
தொல்லையளித்தாரைக் கேட்டறிதும்'

என்று பழமொழியினும் இவ்வரலாறு கூறப்பட்டது. இவன் பெருங்கொடை யாளியாதலால், புலவர் பல

ரானும் புகழ்ந்து பாடப்பெற்றான்; புலவர்பாடும் புகழ் இவனது கொடையானே இவன் மாட்டதாயிற்று.

பைந்தமிழ்வல்ல பரணரும் பேகனது பெருந்தகை ஈகையைக்கேட்டு உள்ளமுவந்து அவனுழைச்சென்று பாடிப் பரிசில்பெற்று மீண்டார். தாம் அங்ஙனம் பரிசில் பெற்றமைக்கு அவன்பால் மிகவும் நன்றியறிதலையுடையராய்ப் பாணாற்றுப்படை பாடினார்.

பாணாற்றுப்படையாவது ஒருதலைவன் தனக்குப் பரிசிலளிப்பச் சிறப்புப்பொதுள வருகின்றவன், தான் வழியிற் கண்ட பாணனொருவனை, 'என் தலைவனிடத்து சேறியாயின், நீயும் இச் சிறப்புப்பெறுதி' என்றுகூறி அவனை அத்தலைவனிடத்து வழிப்படுத்துவது.

“பாணன் சூட்டிய பொற்றாமரைப்பூ மாணிழைவிறலி யணிந்த பொன்னரிமாலையுடனே விளங்க கடும்பரிபூண்ட நெடிய தேரைப்பிணிப்பைவிட்டு, இளைப்பாற்றி ஊரின்கண் இருந்தீர் போல இச்சுரத்தின்கண் இருந்தீர்; நீர் யாவிர்? பாணரோ? என்று எம்மைக் கேட்டலமையாத காமரனொக்கற் கடும்பசிஇரவல! வென்றியையுடைய தலைவனைக்காண்பதன் முன் யாம் நின்னைப்பார்க்கினும் வறியேமாயிருந்தேம்; இப்பொழுது அவ்வறுமை நீக்கி இத்தன்மையே யாயினேம்; 'மயில்கள் எந்நாளும் உடையை உடா; போர்வையைப்போரா' என்பதை அறிந்திருந்தும், போர்வையை மயிலுக்கு அளித்த எம் தலைவனாகிய கடாயானைக்கலிமான் பேகனுடைய கைவண்மை மறுமைப்பயனை நோக்கிற்றோ எனின், அன்று; பிறரது வறுமைடைக்கருதிற்று”

எனப் பாணனை யாற்றுப்படுத்த முகத்தான், பேகனது ஈகை மறுமைப்பயனைக்கருதும் தன்னலத்தின்கண்ணே

பட்டதன்று என்பதையும் அவன் தன் மாட்டு இரப்பார்க்கு மிடிதீரக்கொடுப்பான் என்பதையும் கூறினர் பரணர். மேலும், பேகனது கொடையையும் வீரத்தையும் ஒருங்கு புகழ்வார்.

“அறுகுளத் துகுத்து மகல்வயற் பொழிந்தும்
உறுமிடத் துதவா துவர்நில மூட்டியும்
வரையா மரபின் மாரி போலக்
கடாஅ யானைக் கழற்காற் பேகன்
கொடைமடம் படுத லல்லது
படைமடம் படான்பிறர் படைமயக் குறினே.”

எனவும் பாடினர். கொடைமடம் படுதலாவது கொடைக்குரியாரின்னாரென ஆயாது யாவர் கேட்பினும் அளித்தலாம். அகாரணத்தாற் கொடுத்தலென்பாருமுளர். படைமடமாவது படைக்குப்பின்னிடுதலாம். பேகன் வரையாது யாவர்க்கும் கொடுக்கும் பெற்றிமையையும் பொதுவாக யார்க்கும் கொடுப்பதில் உள்ளஞ்செலுத்தற்கு இடமாகாத மயிலுக்குப் போர்வையளித்தன்மையையும் கருதி அவனைப்பரணர் கொடைமடம் படுதலுடையன் எனப் பழிப்பார் போலப்புகழ்ந்து கூறினர். இவன் கொடையைக்குறித்துப் பரணரைப்போல இவ்வாறு புகழ்ந்துரைத்தார் பிறர் எப்புலவர்தாம்?

பேகனுக்குக் கண்ணகி என்பாள் ஒருமனைவி இருந்தனள். பேகன் கண்கவர் ஆடற்கணிகை பொருத்திபின்மயலிற் சிக்குண்டு, கற்பினுக்கு எல்லைஎன்னும் படி இருந்த தன் மனைவியைத் துறந்து வாழ்வானாயினன். கற்பின் மகளிர் காதலர்ப்பிரிந்து உறைதற ஆற்றுவர் கொல்லோ? கண்ணீர் உகுத்தாள் கண்ணகி; வாடினள்; தேம்பினள்; கணவன்

செயலை வெறுளாயினும் அது குறித்து வருந்தினள்; அருந் துணை அண்ணல் தன் மாட்டு என்று வருவான்கொல் என அவனது வருகையை எதிர்நோக்கி விரல்சுட்டி நாளெண்ணி இருந்தனள். இதனை அறிந்த புலவர் பெருமக்களாகிய கபிலர் முதலியோர் மிகவருந்திக் கண்ணகிதுயரைக்கடிவான் எண்ணினர்; பேகனைக்கண்ணகிபாற் செலுத்த முயன்றனர். அன்னணம் முயன்ற புலவர் பெருந்தகையாருள் பண்ணறி புலமைப் பரணரும் ஒருவர்.

பரணர் கண்ணகிபாற் சென்றார்: அவளுடைய நீலமலர் போலும் கண்களினின்றும் நீர்த்துளிகள் வீழ்ந்து மார்பை மறைப்பக்கண்டார். அதுகண்டும் பொறுப்பரோ இயல்பாக இரங்குதலையுடைய புலவர்? வருந்தினர்மிக, இந் நீர்மையை இப்பொழுதே பேகனிடம் சொல்லியறிவித்து அவனை இவ ளொடும் புணர்த்துவேம் எனக்கருதி அவன் மருங்கு சென்று "மாலைவா சிறிய யாழை இரங்கற் பண்ணாகிய செவ் வழிப்பண்ணிலே வாசிக்கும் வகைபுரிந்து நினது கானத்தை யாம் பாடினேமாக, நின்மனைவி நறியநீலநெய்தற்பூப்போன்று விளங்கிய மையுண்ட கண்கள் கலங்கிவீழ்ந்த அரித்தண் துளி அணிகலனணிந்த மார்பிலே வீழ்ந்து அதனை நினைப்ப வருந்துதல் அமையாளாயினள். அதுகண்டு, 'இளையோய்! எமது கேண்மையை விரும்புவோனாய பேகற்கு நீ கிளை மைமையை உடையையோ? என யாம் அவளை வணங்கிக் கேட்டோம். அதற்கு, அவள் தன் காந்தண் மொட்டு அனைய விரலால் கண்ணீரைத் துடைத்து, நாம் அவனுடைய கிளை ஞரேம் அல்லேம். நீ இப்பொழுது கேட்பாயாக; விளங்கிய புகழையுடைய பேகன எம்மையொத்த ஒருத்தியினது அழகை விரும்பி நல்லூரின்கண், எந்நாளும் வருவன் என்று பலரும் சொல்லுவா' என்று கூறினள்; ஆதலின் நீ அவளை அருளா திருத்தல் கொடிது காண்"

என இரங்கிக்கூறினர். அதுவேயுமன்றி,

"மெல்லிய தகைமையினையுடைய மாமயில் குளிரால் நடுங்குமென்று கருதி அதற்குப் போர்வைஅளித்துப் பாதுகாத்த நல்லிசையையும் மதம்பொருந்திய யானையையும் மனம்செருக்கிய குதிரையையுமுடைய கெடா நல்லிசைப் பேக! யாம் பசித்து வருகின்றேமு மல்லேம்; பாதுகாக்கத் தக்க சுற்றமு முடையே மல்லேம்; களாப்பழத்தினையொத்த கரிய கொட்டையுடைய சிறியயாழை இசையின்பம் விரும்பி உறைபவர் தலையசைத்துக்கொண்டாடும் பரிசு வாசித்து, அருளை விரும்புவோய்! அறத்தைச் செய்வாயாக என்னும் இது நின் மாட்டு யாம் இரக்கின்ற பரிசில் ஆகலின், இன்றிரவில் இனமணி நெடுந்தேரேறிச்சென்று, காட்சிக்கு இன்னாதாக வாழ்கின்ற நின் மனைவியது பொறுத்தற்கு அரிய துன்பத்தைக்களைவாயாக"

என்னும் அரும்பொருளமைய,

'மடத்தகை மாமயில் பனிக்குமென்றருளிப்
படாஅ மீத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக!
பசித்தும் வாரேம் பாரமு மிலமே;
களங்கனி யன்ன கருங்கோட்டுச்சீறியாழ்
நயம்புரிந் துறையுநர் நடுங்கப்பண்ணி
அறஞ்செய் தீமோ அருள்வெய்யோயென
இஃது யாமிரந்த பரிசலஃது; இருளின்,
இனமணி நெடுந்தேரேறி
இன்னா துறைவி யிரும்படர் களைமே'

எனவும் இரங்கிப்பாடினர். இதனுள், 'இன்னாது உறைவி இரும்படர்களை; அருள்வெய்யோய்; அறஞ்செய்தீ

எனயாம் இரந்த பரிசில் இது' எனத்தாம் ஒன்றையும் பெற வேண்டாது பேகனைக் கண்ணகி மாட்டுப்புணர்த்துவதை தாம் வேண்டும் பரிசிலாகக்கூறியதுபாணரது உண்மையான இரக்கத்தை எடுத்துக்காட்டுகின்றது.

பாணர்பாடிய கொற்றவள்ளை.

கொற்றவள்ளையாவது அரசன் புகழையும் அவனுடையபகைவர் நாடு அழிவதற்கு இரங்குதலையும் வலம் படக்கூறுவது.

பாணர்காலத்து உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி என்பான் ஒரு சோழஅரசன் இருந்தான். அவன் ஆற்றலினும் வெற்றியினும் புகழினும்கொடையினும் சிறந்தவன். பாணர் அவனுடைய ஆற்றல் முதலியவற்றைத் தம்முடைய அரிய செஞ்சொற்றீங்கவியிற்சிறப்புறப்பொறிப் பாராயினர்.

வெற்றியைத்தருவதனாற் குருதியில் தோய்ந்து கறைப் பட்டனவாகிய வாட்படைகள் செவ்வானத்தின் அழகை ஒத்தன; கால் உழைமாறிப் போர்க்களத்தினைத் தமக்கு உரியதாக்கிக் கொள்ளுவதனால் அருப்புத்தொழில் நீங்கினவாகிய கழல்கள் ஆனேற்றினது கோட்டை ஒத்தன; அம்பினால் துவைக்கப்பட்டுத் துளைதோன்றுவனவாகிய பரிசைகள் நிலை தப்பாத இலக்கத்தை ஒத்தன; பகைவர்களை எறியும் கால்களால் இடவாய் வலவாயாகிய இடங்களைக்காட்ட கறுழ் பொரப்பட்ட செவ்வாயால் குதிரைகள் தம் இரைவிலங்குகளின் கழுத்தைக்கவ்வி உதிரத்தைத் தோய்த்து உண்ட

புலியை ஒத்தன; கதவை முரித்துச்சினந்து திரிந்து நுனி தேய்ந்த வெண்மையாகிய கோட்டை உடைமையால் யானைகள் உயிரை உண்ணும் கூற்றை ஒத்தன; நீயோ அசைகின்ற உளையினையுடைய செலவான்மிக்க குதிரையாற்பூட்டப்பெற்ற பொலந்தேரில் விளக்கமொடு தோன்றுதலால், கருங்கடலினின்றும் இவர்ந்து எழுகின்ற செவ்விய சுடரினது ஒளியை உடையை; நீ அத்தகையை யாகலால், நின்னை வெகுள்வித்த பகைவருடைய நாடுகள் தாயில்லாத தூவாக்குழவிபோல ஒழியாது கூப்பிடும்."

என்னும் பொருளமைய ஓர் பாடல் பாடிப் பரணர் அவ்வரசனைப்புகழ்ந்தார். இதில் போந்த உவமைநயம் கற்றோர் யாவராலும் போற்றப்படுவதாம்.

பாடிய நூல்கள்.

நற்றிணையில் பன்னிரண்டு பாடல்களும், குறுந்தொகையில் பதினைந்து பாடல்களும் அகநானூற்றில் முப்பத்திரண்டு பாடல்களும், புறநானூற்றில் பன்னிரண்டு பாடல்களும், திருவள்ளுவமாலையில் ஒரு பாட்டும், பதிற்றுப்பத்தில் ஐந்தாம்பத்தும் இவராற் பாடப் பெற்றவை.

பரணர் திருவள்ளுவமாலையில் பாடிய வெண்பா.

மாலுங்குறளாய் வளர்ந்திரண்டு மாணடியால்
ஞால முழுது நயந்தளந்தான் - வாலறிவின்

வள்ளுவருந் தங்குறள்வெண் பாவடியால் வையத்தார்
உள்ளுவவெல் லாமளந்தா ரோர்ந்து.

இதனுட், பரணர், வாலறிவன்நற்றாள்' எனத் திருக்குறளிற் கடவுளைச் சுட்டிக்கூறிய 'வாலறிவு' என்பதனைத் திருவள்ளுவர்க்கு அடையாக்கி அவர் கடவுட்பான்மையர் என்பதைக் குறிப்பின் விளக்கினார். அன்றியும், உவமை முகத்தால் திருக்குறள் குறளாயிருப்பினும் உலகத்தார் கருத்தையெல்லாம் செறித்துக்கொண்டு விளங்குவதையும் குறிப்பித்தார்.

நக்கீரர்

செவ்வே ளிறையைத் திருமுருகாற் றுப்படையான்
வெவ்வே றெளிறுபடை வீடுடனே—ஒவ்வோ
ரெழுத்து மினிப்ப விசைத்தநக் கீரர்
வழுத்து புலமறி வாம்.

பயில்வருஞ் சிறப்பிற் பாண்டிநாட்டுக்குத் திலகமாய்ச் செந்தமிழ் மூன்றுந் திகழ்தனிச் சங்கமலிப விளங்கிய யாணர் அருந்த எழின் மதுரை மூதூரில், **கணக்காயனார்** என்பார் ஒருபுலவர் இருந்தனர். அவரது தவப்பயனால செந்தமி ழணங்கு தீஞ்சுவை மிகவும் அருந்தமிழ்வாணர் அந்தமி ழின்ப மெய்தவும் தமிழ்நாடு திருவெழு சிறப்பிற் பொலிந் தோங்கவும் அவர்க்கு ஒரு புதல்வர்தோன்றினார். அவரே இப் பகுதிக்குத் தலைவராகிய கீரர் என்பார் அவர் இளமையிலே கல்வி நலந்தோய்ந்து, அப்போழ்து மதுரையிலே விளங்கிய முத்தமிழ்ச்சங்கப் புலவர்க்கு முத்தணி எனத் திகழ்ந்தார் எனவே, அவரது கல்விச்சிறப்புககருதி சிறப்புப் பொருளைப் பயக்கும் 'ந' என்னும் இடைச்சொல்லடுத்து யாவரும் அவரை **நக்கீரர்** என அழைப்பாராயினர். மதுரை கணக்காயனார் மகனார் நக்கீரனார் என்றும் நக்கீரதேவநாயனார் என்றும் மதுரை நக்கீரர் என்றும் இவர் விதந்துகூறப்பட்டார்.

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து—முந்தி யிருப்பச் செயல்" என்பதற்கு அவர் தந்தையே இலக்கிய மாயினார்; "மகன் றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை—என்

ஞேற்றான்சொல்என்னுஞ் சொல்" என்பதற்கு நக்கீரரே இலக்கியமாயினார்.

இவர்காலத்துப், புலவரது கல்வியை யளக்குங் கோல் என வயங்கிய சங்கப்பலகையில் இவரே முதன்முதல் வீற்றிருக்கும் சிறப்பைப் பெற்றார்.

குலமும் சமயமும்.

சில தனிப்பாடல்களைக்கொண்டும் திருப்புகழ் முதலியவற்றிற் காணப்படும் சில குறிப்புக்களைக் கொண்டும் இவர் அந்தணர் குலத்தினர் எனபார் ஒருசாரார். இவர் பிறகடவுளரையும் பாடியிருப்பினும், பதினோராந் திருமுறைப் பாடல்களும் திருமுருகாற்றுப்படையும் இவராற் பாடப்பட்டனவாக இருத்தலான், இவர் சைவசமயத்தினர் என்பதில் யாதோரையப்பாடுமில்லையாம்.

புதல்வர்ப்பேறு.

நக்கீரனாருக்குக் கொற்றனார் என்பார் ஒரு புதல்வர் இருந்தனர். அவர் கீரங்கொற்றனார் எனவும் படுவார். இறையனாகப்பொருளுரையில்

'இனி, உரைநடந்து வந்தவாறு சொல்லுதும், மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரனார் தம் மகனார் கீரங்கொற்றனார்க்

குரைத்தார்' என ஒருவராலும் பிறவற்றாலும் இவரும் கல்விசான்றவர் எனக் கருதப்படுகின்றனர்.

தமிழ்ச்சிறப்பை நிலைபெறுத்தது.

நக்கீரனார் மதுரைச்சங்கப்புலவருள் தலைவராய்ப் பொங்குபுகழ்பெற வீற்றிருந்தகாலை குயக்கொண்டான் என்னும் பெயருடையான் ஒருவன் மதுரைப் பட்டிமண்டப மேறி வடமொழியே சிறப்புடைத்து என்றும் தென்மொழி இழிந்ததென்றும் கூறினான். அதுகேட்டுப் பொறாத நக்கீரர்,

முரணில் பொதியில் முதற்புத்தேள் வாழி
பரணர் கபிலரும் வாழி—அரணிலா
ஆனந்த வேட்கையான் வேட்கோக் குயக்கொண்டான்
ஆனந்தஞ் சேர்கசுவா கா.

எனப்பாடினார். அவ்வளவிலே கொண்டானைக் காலன் கொண்டானாக, அது கண்ட பலரும், அவனை உய்விக்கும் படி நக்கீரரை வேண்டினார். வேண்ட அவரும், 'செந்த மிழே அவனை உய்விப்பதாக' எனக்கூறி,

"ஆரிய நன்று தமிழ்தீ தெனவுரைத்த, காரியத்தாற் காலகோட்பட்டானைச்—சீரிய, அந்தண் பொதியி லகத்தி யனாராணையினால செந்தமிழே தீர்க்கசுவா கா"

எனப்பாடிப் பிழைப்பித்தார். இதனால், நக்கீரனார்க்குத் தேந்தமிழ் மொழியிற் போந்த ஆர்வம் கைகடந்தது என் பது புலனாகும்.

நக்கீரர்

இறையனாரோடு வாதுபுரிந்தது.

நன்புலமை நக்கீரர் செந்தமிழ்ச் சங்கத்தே வீற்றிருந்த காலைப் பாண்டியமன்னன் தன் அரமனை உபரிகையின் கண்ணே யிருப்பான், ஓர்நாள், தன் கோப்பெருந்தேவி யூண்டுவராலும் ஓர் நறுமணம் வீசுதலை உணர்ந்தான். உணர்ந்தவன் 'இந் நறுநாற்றத்திற்குக் காரணமென்னை' என்று பலதரமாய்ந்தும், புலப்படாமையால், 'இந்நறுமணத்திற்கு ஏதுவை விளங்க உரைப்பார் இப்பொற்கிழியைப்பெறுவார்களாக' என்று சொல்லிச் சங்கமண்டபத்தே ஆயிரம் பொற்காசு அமைந்த கிழியொன்றைக் கட்டுவித்தான். சங்கப்புலவரெல்லாம் தத்தம் மனததனபாடியும் கருத்து ஒவ்வாமையால், செருக்கொழிந்திருப்ப, அதனை அறிந்த தருமி என்னும் அந்தணச்சிறுவன். தான் நெடுநாள் தன் வறுமை களைவான் மதுரையிற் கோயில் கொண்டருளிய சுந்தரமூர்த்தியை இரந்து வேண்டுவான், அன்று, சங்கத்து நிகழ்செய்தி உரைத்துப் பாண்டியன் ஒப்புக்கொள்ளும் வகை பாடல்ஒன்று இயற்றிகொடுப்பவேண்டி நின்றான். திரிபுரமெரித்த விரிசடைக்கடவுளும் சிந்திப்பான், 'நெடுநாள் நம்மை வேண்டி வழிப்படும இன்னாற்கு இஃதோருதவி ஆற்றுதும், என்றவாறு. அவ்வாறு திருவருள் கூர்ந்து, "கொங்குதேர் வாழ்க்கையஞ்சிறைத்தும்பி, காமம் செப்பாது கண்டது மொழிமோ, பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற், செறியெயிற் றரிவை கூந்தலின், நறியவுமுளவோ நீயறியும் பூவே" என்னும் பாடலைச் செப்பேட்டின் எழுதித் திருமுன்னர் இட்டுக்கொடுப்பப் பெற்றுத்

தருமி அதனைப் பாண்டியன் முன்னிலையிற்சென்று கழி உவகையொடும் படித்து நின்றான். நிற்ப, அரசன் தலையசைத்து அப்பாடலை எழுத்தெழுத்தாக ஒப்புக்கொண்டு 'பொற்கிழி இவற்கு உரித்தாகுக' என்று கூறினான். தருமியும், நெடுநாள் பட்ட வறுமைக்கு ஒருவாறு எல்லை காண்பான் அதனை அறுப்பச்செல்வுழிப் புலமையிற் செருக்கிய நக்கீரர், 'பொற்கிழி அறுப்பபொறுத்தி' என இடையே சென்று தகைத்து, 'இப்பாடலில் கூந்தற்கு இயற்கைமணம் உளதென்று கூறப்பட்டமையின், இது பொருட் குற்றமுடைத்தாயிற்று' எனக்கூறினார். அதுகேட்ட தருமி, 'எம்பெருமான் கவிக்கும் குற்றமுண்டாங்கொல்? இஃது என்ன விளைவு? எம்பெருமான் நம்மை வஞ்சித்தானாகல் இந் நக்கீரர் இன்மை கூறினாராதல் என்னுமிரண்டினொன்று பெறப்படுதல் வேண்டும். ஆயினும், வைகலும் நம்மால் வழிபடப்பெறும் ஆலவாயில் அவிர்சடைக்கடவுள் நம்மைப் பெரிது சோதியான்' எனக் கவன்று நிற்ப, அடியார்க்கு இரங்கும் அண்ணலாரும், பல்லாயிரம் மாணாக்கர்கள் தம்முடன் வரத் தாம் ஓர்புலவர்போலும் திருக்கோலங்கொண்டு சங்கமண்டபத்தே எழுந்தருளி, 'எமது கவியை ஈண்டுக் குற்றம் கூறியவன் யாவனோ?'' என வினாவினர். அதனைச் செவியுற்ற நக்கீரனும், தாழ்க்காது முன்சென்று, ''யாமே நுங்கவியைக் குற்றங் கூறினேம்; அதனுட் சொற்குற்றமின்று: 'செறியெயிற்றரிவை கூந்தலின் நறியவு முளவோ' எனக் கூந்தற்கு இயற்கைமணம் உளதென்று புலப்படக்கூறி இருப்பதால் பொருட்குற்றமுடைத்தாயிற்று' என்றனர். அதுகேட்ட கண்ணுதற் பெருமான், 'பதுமினி சித்தினி சங்கினி அத்தினி என்னும் நால்வகைச் சாதிப்பெண்களுள் சிறந்த பதுமினிமார் கூந்தற்கு மியற்கைமணம் இன்றோ?' என வினவ, 'அவர்க்

கும், சாந்துமலர் முதலியன அணியாதவிடத்து இயற்கையின் மணமுண்டாவதில்லை' என்றனர் நக்கீரர். பின்னர், எழில் மதுரை யிறையனார், 'தேவமங்கையர் கூந்தற்குமியற்கை மண மின்றோ? என வினவக் கீரனாரும் அவர்க்கும் 'கற்பகமுத லிய தேவதருக்கள் ஈந்தன் மலராலும் பெறுகின்ற மண மன்றி இயற்கைமணம் இன்று' எனச் சாதித்தனர். எவ் வாற்றானும் கீரனாரைச் சொல்லால் வெல்லுமாற்றை உண ராத கூடல்வாணனார் இறுதியாக நக்கீரரை நோக்கி, 'நீ வழி பட்டுவரும் சோமசுந்தரக்கடவுளின் தேவியாரது கூந்தற்கு மியற்கைமணம்இன்றோ?' என்று கடாவினர். சொற்போ ரிற் பின்னிடாத நக்கீரரும், 'அவள் கூந்தற்கும் தருக்களின் மலர்களானன்றி மணமுண்டாவதில்லை' என்று துணிந்து உரைத்தனர். அது கேட்டுப்பொறாத கறைக்கண்டனார் தம் நுதல்விழியைத் திறந்து கீரனாரைச்சினந்து நோக்கினார். வர் தவர் தம் குலதெய்வமாகி இலகுதிங்கட் சடையனார் என் பதனை உணர்ந்த அக்காலையினும், நக்கீரர் புறக்கொடாது, அவரை நோக்கி 'நீவிர் நெற்றிக்கண் காட்டினும், நும்குற்றம் குற்றமே: நெற்றியில் மட்டுமன்றி உடம்பெல்லாம் கண் கொண்டு காட்டினும் குற்றம் மறைபடாது' எனச் செருக்கி உரைத்தார்.

இவ்வாறு எம்மொழிக்குந் தலைவனாகிய செம்மலையும் பொருள் செய்யாது உரைக்கவேண்டின், கீரனார்க்கு இருந்த கல்வி வன்மையும் கணிப்பருமதிப்பும் எத்துணைய ஆதல் வேண்டும்?

திருமுருகாற்றுப்படை பாடியது.

நக்கீரர் சிவபெருமானது நுதற்கண் நெருப்புக்கு ஆற்றாதவராகி மதுரைப் பொற்றாமரைத் தடாகத்துள்ளே வீழ்ந்து இறைவனாரை ஏத்தி நின்றார். கண்ணுதற் கடவுளும் அவர் மாட்டு அருள் கூர்ந்து, 'நீ கைலை காணின், நின் நோய் தீரும்' என்றார். அவ்வாறே அவர் கைலைக்குச் செல் போது, பொழுது புணர்காலையில் வழிபாட்டின் பொருட்டு ஓர் குளக்கரையில் ஆலமரத்தடியில் இருந்து பூசை செய்து கொண்டிருப்பவே, அம்மரத்தினின்றும் ஓர் வீழ்து வீழ்ந்து பாதி குளத்தினும் பாதி கரையினுமாகக் கிடப்பவே, நீரிற் பட்ட பாதி மீனாகவும் கரையிற்பட்ட பாதி பறவையாகவும் ஓடின. அதுகண்டு நக்கீரனார் வியப்பவே, பூசை வழுவிற்றாதலால், அம்மரத்தின் வாழ்ந்தொரு பூதம் அவரைத் தூக்கிச் சென்று ஓர் குகையிற் கொண்டு உய்த்தது.

அக்குகையில் முன்னரே தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்மர் அப்பூதத்தால் அடைக்கப்பட்டிருந்தனர். அவ்வலகை ஆயிரவரை ஒருங்கு சேர்த்து உண்ணும் வழக்கத்தை உடையதாயிருந்தமையின், நக்கீரரொடும் ஆயிரவரானமைக்கு உவந்து, அது அவரை உண்ணக் கருதி நீராடப் போயிற்று. முழையில் முன்னரே அடைக்கப்பட்டுக் கிடந்தவர், ஆயிரம் என்னும் எண் நக்கீரனாரால் முற்றினமை கண்டு வருந்தி அவரை வெகுண்டார். கீரனாரும் அவரைப் பொறுத்துக் கொள்வான் கூறி முருகப்பிரானது திறல், வென்றி, புகழ், அருட்சிறப்பு முதலியவற்றை விதந்து திருமுருகாற்றுப்படை என்னும் நூலைப்

பாடினார். செந்தமிழ்க்கு இரங்கும் திறல்செழு சேஎய் கீரனார் சவிக்கு, உவந்து தன் மின்னிவர் வேற்படையொடு மஞ்ஞை ஊர்தியில் எழுந்தருளி, நீராடி முடித்து உண்ணும் வேட்கையுடன் புழையை நாடிய அலகையின் பார்வைப் பிளந்து, உய்வித்தார். தெய்வப்புலவரது பாடற்கு உவவாத கடவுளரும் உளரோ? கீரனாரது பெருமை கண்டு யாவரும் மகிழ்ந்தார்; புகழ்ந்தார்.

திருமுருகாற்றுப்படை புலவராற்றுப்படை எனவும் முருகு எனவும் வழங்கப்பெறும். அந்நூலை நாடோறும் நியமமாகப் பயில்வார்க்கு வெற்றி வேற்சேய் இன்னருள் புரிவன் எனச் சான்றோராலும் கருதப்பட்டுவருகின்றது. 'ஆசையா னெஞ்சே யணிமுருகாற் றுப்படையைப், பூசையாக கொண்டேபுகல்' எனவருவது காண்க.

நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற் றுப்படையைத், தற்கோல நாடோறுஞ் சாற்றினால்—முற்கோல, மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளி, தானினைத்த வெல்லாந்தரும்.

புலமைக்கீரர் கைலைகண்டது.

இவ்வாறு அலகைவாயில் நின்றும் பிழைத்துப்போந்த நலமிகு புலமை நக்கீரர் தென்கைலை எனப்படும் திருக்காளத்திக்கண் சென்று, அங்குப் பொன்முகரியாற்றில் நீராடுகையில் பத்தம் சூடிய பித்தனருளால் கைலைக்காட்சி

பெற்றார். தைலேகண்டால் நோய்தீரும் என்றதற்கு இணங்கக் கீரர் அக்கணமே தம் வெப்புநோய் நீங்கப்பெற்றுத் தமிழ்செழுகூடல் தனிப்பெருஞ்சங்கம் புக்கார். திருமுருகாற்றுப்படைச் சிறப்பை நோக்கிப் புலவரெல்லாம் நனி மகிழ்ந்து முன்னையிலும் பன்மடங்கு கீரரைப் புகழ்ந்தனர்.

களவியலுரை கண்டது.

சங்கப்புலவர் தழைத்து இனிதிருந்த செந்தமிழ்ப் பாண்டிவளநாடு, பின்னர்ச் சிலநாள்கழிய, வற்கடம் கூர்வதாயிற்று. ஆகவே, புலவரெல்லாம் ஆண்டு ஆண்டுப் பிரிந்து உறைவாராயினர். வற்கடம் நீங்கிய பிறகு, அரசன் புலவரைக் கொணரும் பொருட்டு ஆட்களை விடுப்ப, அவர் எழுத்திலக்கணமும் சொல்லிலக்கணமும் வல்லாரைக் கொணர்ந்து, பொருளதிகாரம் வல்லாரை யாண்டும் தலைப்பட்டிலேம்' எனவந்தார். பொருளின்றேல், எழுத்துஞ்சொல்லும் பயனிலவென உணர்ந்து பாண்டிய மன்னன் கவலை மீக்கொண்டு இருப்பது நோக்கிய, ஆலவாயில்விர் சடைமாதவர், களவியல் என்னும் பெயரையுடையதொரு அகப்பொருணூலைச் செப்பேட்டினெழுதித் தன் படிவத்தின் கீழிட்டார். பூசைபுரிவான் அதன் வரலாற்றை உணராது எடுத்து அது பொருளதிகாரம் என்பதனை உணர்ந்து, அரசன் மாட்டுக்கொண்டு கொடுப்பப் பாண்டியனும் தம் கவற்சி நீங்கப்பெற்று, 'இந்நூல் கண்ணுதற்பெருமான் கனிந்தருளியதாகும்' எனக்கொண்டு சங்கப்புலவரை நோக்கி அந்நூற்குப் பொருள் காணவேண்டினன். கடவுணூலுக்குத் தெய்வப்புலவரே பொருள் காணத் தகுதியுடையவாறு

லரோ? புலவரெல்லாம் தத்தமக்குத் தோன்றிய உரையைக் கூறிக் தத்தம் உரையே சிறந்தது என்று சிலகாலம் செல்லாநிற்ப 'இவ்வுரையே கடைப்பிடிக்கத் தக்கது' என ஒருதலை துணிதற்கு இடனில்லாதாயிற்று. ஆகவே மெய்ப்பொருளுரை எதுவென அறிவான் விரும்பி அருந்தமிழ்ப் புலவரெல்லாம் உரைசோதிப்பான் ஒருவனைப்பெறவேண்டி, ஆலவாயண்ணல் திருக்கோயிற்சென்று ஓரிரவு தங்கிடப்ப இடையாமத்து, "இவ்வூர் உப்பூரிகுடிகிழார் மகனாவான் உருத்திரசன்மன் என்பான் பைங்கண்ணன், புன்மயிரன், ஐயாட்டைப் பிராயத்தான் ஒரு மூங்கைப்பிள்ளை உளன்; அவனை அன்னன் என்று இகழாது கொண்டு போந்து ஆதன்மேல் இரீஇக் கீழிருந்து சூத்திரப் பொருளுரைத்தால் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்க்கும் மெய்யாயின உரை கேட்டவிடத்து; மெய்யல்லா உரை கேட்டவிடத்து வாளாவிருக்கும்; அவன் குமார தெய்வம்; அங்கோர் சாபத்தினால் தோன்றினான்" என உரைத்து ஓர் தெய்வக்குரல் மூன்றுதரம் இசைத்தது. புலவரெல்லாம் அதனை உடன்பட்டு, அவ்வாறே உருத்திரசன்மரைச் சிறப்பித்து இரீஇ அவர் முன்னர்த் தாம் தாம் கொண்ட பொருளையெல்லாம் உரைத்தார். எல்லாரும் முறையே உரைப்பக்கேட்டும் வாளாவிருந்தார் உருத்திரசன்மர்; மதுரை மருதனிளநாகனார் உரைப்ப ஒரோவழிக் கண்ணீர்வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்த்தனர்; நன்மாண் புலமை நக்கீரர் பொருளுரைக்கவிடத்துப் பதந்தொறும் கண்ணீர்வார்த்து மெய்ம்மயிர் சிலிர்ப்ப இருந்தனர். இருப்பப் புலவரெல்லாம், தமக்கு வரும்புகழினும் மெய்யுரை அறிந்துகொள்ளும் விருப்பினராதலால், 'இந்நூற்கு மெய்யுரை பெற்றும்' என்று ஆர்ப்பெடுத்தனர்.

களவியல் **இறையனார்களவியல் எனவும் இறையனாரகப்பொருள்** எனவும் வழங்கும். தெய்வ நூலுக்குக்

தெளிபொருள்கண்ட நக்கீரரைத் தெய்வப்புலவரென்றே யாவரும் கொண்டாடினர். நக்கீரரும் செல்லுமிடமெல்லாம் புகழ்தம்மைச் செறிப்பவும் தகைப்பவும் இனிது வாழ்ந்தனர்.

பாண்டியன் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறனைப் பாடியது.

நக்கீரர் பாண்டியனெடுஞ் செழியன் கிள்ளிவளவன் முதலியோரைக் குறித்துத் தம் செய்யுட்களிற் பாராட்டிக் கூறியிருக்கின்றனர். பண்டைத் தண்டமிழ்வாணரெல்லாம் பரிசில்வேட்டும் வேளாதும் வீரரையும் வள்ளல்களையும் திறம்படப்பாடும் அறத்தகையாளர்.

அவர் காலத்துப், பாண்டியன் நன்மாறன் முடிவேந்தருட் சிறப்புற்றுச் செங்கோலோச்சி வந்தான். அவன் கூற்றத்தையன்ன சீற்றத்தை உடையன்; வாலியோனையன்ன வலிமையை உடையன்; தேய்தலில் புகழில் மாயவனையனையன்; கருதுக முடித்தலில் முருகனையன்னன். அவன் திறல்கெழுகுரிசில்.

இத்தகைய அவனுடைய தீர்வருஞ் சிறப்புக்களை உன்னி அவனைத் தம் தீஞ்சுவைச்செய்யுளாற் புனைந்து பாடினர் நக்கீரர்.

அப்பாடலில், அவர்,

"ஓங்குவாள்மாற !

ஏற்று வலனுயர்த்த நெருப்பை ஒத்த அவிர் சடையினையும் மாற்றருங் கணிச்சியையுமுடைய மணிமிடற்றோ

னாகிய சிவபெருமானும், கடல்வளர் புரிவளையை ஒத்த மேனியையும் அடல்வெங்கலப்படையையும் பனைக்கொடியையும் உடைய பலராமனும் மண்ணுறு திருமணியை ஒத்த மேனியையும் விண்ணுயர் புட்கொடியையுமுடைய விறல் வெய்யோனாகிய மாயோனும் அணிமயிற்கொடியை உயர்த்த மாறா வென்றியையும் பிணிமுக ஊர்தியையுமுடைய ஒள்ளிய செய்யோனாகிய முருகனும் என்று சொல்லப்பெறும் முடிவுகாலத்தைச்செய்யும் வலிமையினையும் தோலாத நல்லிசையினையுமுடைய ஞாலம் காக்கும் நால்வருள்ளும், நீ மாற்றருஞ்சீற்றத்தாற் கூற்றத்தினை ஒப்பாய்; வலிமையால் பலதேவனை ஒப்பாய்; புகழால் பகைவரைக் கொல்லும் மாயோனை ஒப்பாய்; முன்னியது முடித்தலால் முருகனை ஒப்பாய்; அவ்வவ்வாறு அவ்வவரை ஒப்பதனால், நினக்கு எவ்விடத்தும் செய்தற்கரிய செயல்களுமுளவோதாம்? ஆகலின், இரவலர்க்கு அருங்கலங்களை அருகாது ஈந்து, யவனர் நன்கலத்திற் கொடுதந்த தண்கமழ் தேறலை பொன்னாற் செய்யப்பட்ட புனைகலத்தின்கண் ஏந்தி நாள்தோறும் ஒண்டொடிமகளிர் ஊட்ட மகிழ்ச்சியிற்சிறந்து இனிதாக ஒழுகுதி; அங்கண்வானத்து ஆரிருளகற்றும் வெங்கதிர்ச் செல்வனைப் போலவும் மேற்றிசையிற் றோன்றும் தண்கதிர்ப்பிறைத் திங்களைப் போலவும் இவ்வுலகமோடுடனே நின்று நிலைபெறுவாயாக'' எனப்புகழ்ந்துரைத்தார். புலவர், உலகமிருப்பளவும் மாறனை வாழக் கூறினமையால், மாறனது வலியும் புகழும் கொடையும் முதலியன வெல்லாம் உலகிற்கு இன்றியமையாதன என்பதை வற்புறுத்தினர்.

நக்கீரர் பாடிய
பொருண்மொழிக் காஞ்சி.

நிலையாமையைக் குறித்து நக்கீரர் புறத்திற்பாடிய அறத் துறைப்பாடல் அரும்பொருளமைந்து இனிமை மிகப்பயந்து மிளிர்கின்றது.

"தெண்கடலாற் சூழப்பட்ட உலக முழுதையும் பிற அரசர்க்குப் பொதுவாதலில்லாது தமக்கே உரியதாகத் தம் வெண்கொற்றக்குடைநிழல் செய்யும்வகை ஆட்சி புரிந்த ஒருங்கு தொக்க உரிமையுடையோர்க்கும் இடையாமத்தும் பகற்போதும் துயிலாது கடிய விலங்குகளைப் படுக்கக்கருதி அவற்றின் வரவு பார்த்திருக்கும் கல்லாத ஒருவற்கும் உண்ணப்படும் உணவு நாழியே; உடுக்கப்படும் உடையும் இரண்டே காண்மின்; பிறவெல்லாம் அவர் இருவர்க்கும் ஒத்துநிகழும்; ஆதலால், செல்வத்தினது பயன் ஈதலாகும்; அச்செல்வத்தை யாமே துய்ப்போம் என இருப்பின், இவ் வுலகில் தவறுபாடு உறுவன, பலவாகும்"

எனப்பொருள்படுமாறு,

"தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய வொருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்
கடுமாப் பார்க்குங் கல்லா வொருவற்கும்
உண்பது நாழி உடுப்பவை யிரண்டே;
பிறவுமெல்லா மோரொக் கும்மே;
செல்வத்துப் பயனே ஈதல்;
துய்ப்பே மெனினே, தப்புன பலவே"

எனக்கூறிய நயம் சாலவும் போற்றற்பாற்று, 'செல்வத்துப்பயனே ஈதல்' என இவர் கூறியது ஈகையின் சிறப்பை நன்கு விளக்கி நிற்கின்றது. இத்துணைச் சுருக்கமாகத் தாம்கொண்ட நுண்பெரும் பொருளை விளங்கக் கூறும் ஆற்றல் தொல்லைப்புலவர் மாட்டன்றி யாவரிடத்துக் காணப்பெறுவேம்?

நக்கீரரது நவிகெழு சிறப்பு.

நலஞ்சான்று ஒளிரும் புலஞ்சான்ற நக்கீரர் சங்கப்பலகையில் முதன் முதல் வீற்றிருந்தமையும் திருமுருகாற்றுப்படையும் நெடுநல்வாடையும் பாடினமையும் கறைகெழு கண்டத்து இறையனாரொடு வாது புரிந்தமையும் களவியலுக்கு உரைகண்டமையும் பிறவும் அவர்க்குக் கல்வியின் மிக்க புகழுக்குக் காரணமாயின. ஒரு காலத்து நக்கீரர் தண்டமிழ்ச்சங்கத்து எண்டகு புலவர்க்குத் தலைவராகவும் இருந்தனர். இவ்வாறு யாவரும் புகழெடுப்ப வீற்றிருந்த நக்கீரர் கண்ணுதலண்ணல் பாற்டு மிக்க பத்தியுடையாராகவும் இருந்தனர். திருக்காளத்தியில் நக்கீரரால் சிவலிங்கம் ஒன்று நிறுவப்பட்டதென்றும் கூறுவர். அதற்கு நக்கீரநாதர் எனவும் நக்கீரலிங்கர் எனவும் பெயர்கள் வழங்கி வருகின்றன. இவர் கைலைபாதி காளத்திபாதியந்தாதி என ஒருநூல் பாடினதாகவும் கூறுவர். இவை முதலிய எல்லாம் ஒருதலையாகத் துணிதற் பால வல்ல வேனும், நக்கீரர் சிவபெருமான் மாட்டு மிக்க பத்தியுடையர் என்பதன் கண் சான்று பகர்கின்றன.

மதுரை மேலே மாசி வீதியிலுள்ள சங்கத்தார் கோயில் என்னும் நக்கீரர் கோயிலிலும் திருப்பரங்குன்றத்து முத்துக்குமாரசுவாமியின் பக்கத்திலும் இவருடைய திருவுருவம் உண்டு. திருவீங்கோய் மலையிலும் இவருடைய திருவுருவம் ஒன்றிருப்பதாகக் கூறுவர். இங்ஙனம் தந் திருவுருவை வடித்து வழிபடப்பெறும் தெய்வச்சிறப்பும் நக்கீரதேவர் எனவழங்கும் இவரது பெயரும் இவர் தெய்வஞ்சான்ற பெருந்தகையர் என்பதை நன்கு விளக்குகின்றன. இவரை வடமொழியிலும் வல்லவர் என்ப.

பிற்காலத்துப் புலவோர்இவரைப் புகழ்ந்து பாடிய இடங்களும் பலவால்.

வளவாய்மை சொற்ப்ரபந்த முளகீர னுக்குகந்து
　　மலர்வாயிலக்கணங்க—ளியல்போதி
அடிமோனை சொற்கிணங்க வுலகாமு வப்பவென்று
　　னருளால ளிக்குகந்த—பெரியோனே."

"மருகுமாமதுரைக் கூடல் மால்வரை வளைவுளாகிய
　　நக்கீர ரோதிய வளமைசேர்தமிழுக்காக
　　　நீடிய கரவோனே"

"கீதவிசை கூட்டி வேதமொழி சூட்டு
　　கீரரியல் கேட்டக்ருபை வேளே"
"நக்கீரர் சொற்றித்தித்ததே"

　　எனத் திருப்புகழ் புகழ்ந்துரைத்தது,
"கீரன் இலங்கிலை நெடுவேற் செம்மல்......
　　.........முருகாற்றுப்படை மொழிந்தான்"
எனச் சீகாளத்திப்புராணம் இசைத்தது.

"நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற்றுப்படை" என ஓர் பழம்பாடல் எடுத்துரைத்தது.

கல்லாடம், திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், திருவிளையாடல், திருப்பரங்கிரிப்புராணம் முதலிய நூல்களிலும் நக்கீரர் வரலாறு காணப்படுகின்றது.

"கபிலர் பரணர் நக்கீரர் முதனாற் பத்தொன்பது பல்புலவோர்" என்னும் பாடற் பகுதியும் 'கபில பரண நக்கீரர்'' என்னும் வழக்கும் அம்மூவருடைய பெருமையையும் கல்விச்சிறப்பையும் ஒருங்கு விளக்குமென்க.

நக்கீரர் பாடியவை.

பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படையும், நெடுநல்வாடையும், நற்றிணை குறுந்தொகை அகநானூறு புறநானூறு என்பவற்றுட் சில பாடல்களும், திருவள்ளுவமாலையில் ஒருபாட்டும், நாலடிநாற்பதும் இவராற் பாடப் பெற்றவை. இறையனார் களவியலுரை ஒன்றும் இவரால் இயற்றப்பெற்றது.

இவையன்றிக் கைலை பாதி காளத்திபாதி அந்தாதியும், சிவபெருமான் பாட்டுக்குக்குற்றம் கூறியது பற்றி அவர் சினந்த காலை அதனையாற்றப் பாடிய கோபப்பிரசாதமும் ஈங்கோய்மலையெழுபதும் இவராற் பாடப் பெற்றன என்பாருமுளர்.

பதினோராந் திருமுறையில் திருமுருகாற்றுப்படை தவிர ஒன்பது பிரபந்தங்கள் இவர் பாடினரெனக் கொள்வர் சிலர்.

நக்கீரர் திருவள்ளுவமாலையில் பாடிய வெண்பா.

தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளால்
ஆறு வறமுதலா வந்நான்கு—மேனோருக்
கூழி னுரைத்தாற்கு மொண்ணீர் முகிலுக்கும்
வாழியுல கென்னாற்று மற்று.

இது, "கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்—டென்னாற்றுங் கொல்லோவுலகு" என்னுங் குறட் கருத்தைக் கொண்டு கூறித் திருக்குறள் போலும் நீதி நூலைச் செய்தல் திருவள்ளுவர் போலும் சான்றோர்க்குக் கடப்பாடாமென்பதையும் வரையாது வேண்டாது பெய்யும் மாரிக்குக் கைம்மாறு ஆற்றலாகாததுபோல இவர்க்கும் உலகம் கைம்மாறு ஆற்றும் ஆற்றலற்றது என்பதையும் குறித்து நிற்கின்றது.

பண்டித இராமசுப்பிரமணிய நாவலர் எழுதியவை.

தமிழின் தற்கால நிலைமை. *தமிழ்மொழியைக் குறித்து அழகிய செந்தமிழ் நடையில் எழுதப்பெற்றது.* **விலை அணு 6.**

ஆத்திசூடி உரை. *பதவுரை குறிப்புரை விசேடவுரைகளுடன் வெளிப்படுத்தப்பட்டது.* **விலை அணு 4.**

தமிழ் தமிழ்த்தாய். *செந்தமிழ் மொழியின் தீஞ்சுவை நயம் ததும்புவன.* **விலை அணு 4.**

தனிப்பா வலங்கல் முதற்பாகம். *இன்பம் கசறிந்த தனிப் பாடல்களை உடையது. நீதி, அலங்காரம், இன்பச் சுவைச் செய்யுட்கள் முதலியன இதிற் காணப்பெறும்: குறிப்புரையுடன்.* **விலை அணு 3.**

தனிப்பா வலங்கல் இரண்டாம்பாகம். *சமசியை, அணிகள் பொருட்டொகைச் செய்யுட்கள், கதைக்குறிப்புகள், திருக்குறணீதிகள் முதலியன இதில் உள்ளன. நூற்றின்மேற்பட்ட தனிச் செய்யுட்டொகுதி.* **விலை அணு 4.**

கனவுலகு. *ஒரு கற்பனலங்காரக் கட்டுரை இலக்கிய நயம் வாய்ந்தது.* **விலை அணு 2.**

ஔவையார் தனிப்பாட்டு ஆராய்ச்சி. **விலை அணு 6.**

கலைசைச் சிலேடைவெண்பா *பதவுரை குறிப்புரை விசேட உரைகளுடன்.* **விலை அணு 12.**

முத்தமிழ்வாணர். **விலை அணு 8.**

"செந்தமிழ் நிலையம்"

பத்மநாபபுரம், **தக்கலை, P. O.**